KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 28 மார்ச் 2025 இதழ்:- 13

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழம் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## சரணடையும் புலிகளின் தலைவர்களைக் கொலை செய்யுமாறு உத்தரவிட்டவர் சவேந்திர டி சில்வா என பிரிட்டன் தெரிவிப்பு!

சரணடையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களை கொலை செய்ய வேண்டும் என உத்தரவிட்டவர் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி கட்டங்களில் 58வது படையணியின் தளபதியாக விளங்கிய சவேந்திர சில்வா என பிரிட்டன் தெரிவித்துள்ளது. (3ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
**eelanadu.ca**
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

## கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு உண்மை என்ன? விபரம் உள்ளே!

# தையிட்டி சட்டவிரோத விகாரையில் கட்டப்பட்ட கட்டிடத்தை திறந்து வைத்த வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர்



யாழ்ப்பாணத்தில் தையிட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையான திஸ்ஸ விகாரையில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட மண்டபம் 23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தனபாலவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.(4ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு
எதிர்பாருங்கள்! பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை விபரங்கள் உள்ளே!

## தேசபந்து தென்னக்கோனை ஒளித்து வைத்திருந்த தரப்பினர் யார்? ரணிலா? டிரான் அலஸ்ஸா?

## படித்த சமூகமொன்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள்?



வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாதங்களை வியந்து நோக்கிய காலம் ஒன்றும் இருந்தது. ஒரு காலத்தில் திரு அமிர்தலிங்கம் உரையாற்றும் போது (3ம் பக்கம் பார்க்க)

THINKING OF
# SELLING OR BUYING A HOME?

**www.AgentSiva.com**
*Your neighborhood sales representative*



**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX REALTRON Realty Inc. Brokerage
Home of the Top Producers


## Siva Kandiah
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

## Piravien Siva
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com

885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated
**Bus: 416-289-3333**





22 Years Real Estate Experience

**• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY**

### Warden/Finch



**Scarborough** **$424,900**
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school

### Kennedy / Hwy 401



**Scarborough** **$429,900**
1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit

### Markham / Sheppard Ave



**Scarborough** **$479,000**
1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse

### McCowan / Ellesmere



**Scarborough** **$599,000**
2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC

### Mccowan & Hwy 401


**Scarborough** **$549,900**
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views

### Kennedy / 401



**Scarborough** **$538,000**
2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining

### Simcoe St / 401



**Oshawa** **$575,900**
3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft

### Grandview Dr. / Bloor



**Oshawa** **$649,800**
2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated

### 9TH LINE / HIGHWAY 7



**Markham** **$1,100,000**
4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse

### Dixie/ Glenanna


**Pickering** **$799,000**
3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities

### Audley Rd & Rossland Rd E


**Ajax** **$799,000**
3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse

### Markham & Ellesmere



**Scarborough** **$1,050,000**
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance

### Morningside/Mcnicol



**Scarborough** **$1,099,900**
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

### 401/Morningside


**Scarborough** **$1,249,000**
4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407

### 10th Line/ Hoover Park Dr


**Stouffville** **$1,499,999**
4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed

### 9th Line/Hoover Park


**Stouffville** **$999,000**
4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# படித்த சமூகமொன்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள்?



வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாதங்களை வியந்து நோக்கிய காலம் ஒன்றும் இருந்தது. ஒரு காலத்தில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் உரையாற்றும் போது அந்த உரையை வியந்தவர்கள் உண்டு. அமிர்தலிங்கம் பேசிக் கொண்டிருக்கும் போது. அற்புதமான உரையென்று சபாநாயகரே பாராட்டிய சந்தர்ப்பங்களும் உண்டு.

அந்தளவுக்கு அன்றைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரையின் கனதியும் அதனை வெளிப்படுத்தும் நாகரிகமும் அவர்களின் அரசியல் நிலைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்ப்பவர்களால் கூட வியந்து நோக்கப்பட்டது. அன்றைய சூழலில் வடக்கு, கிழக்கில் முக்கியமாக வடக்கிலிருந்து சென்ற தமிழ் பிரதிநிதிகள் கருத்து வேறுபாடுகளை கடந்தும் மதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால், இன்று ஒருவர் பேசுவதை முன் வைத்து யாழ்ப்பாணத்தில் அனைவருமே இப்படித் தானா என்று பரிகசிக்குமளவுக்கு நிலைமை தரம் தாழ்ந்து விட்டது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அபிவிருத்தி குழுக் கூட்டங்கள் தொடர்பான காணொலிகள் ஓய்வுநேர நகைச்சுவைக்காக பயன்படுத்தும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒடுக்கு முறைக்குள்ளாகி இருப்பதாகக் கூறி வரும் அதற்கான நீதியை பெற்றுத்தரும் பொறுப்பை சர்வதேசத்திடம் எதிர்பார்க்கும் தமிழ் சமூகம் தங்களை பிரதிநிதித்துவம் செய்பவர்களை சரியாகத் தெரிவு செய்ய முடியாத சமூகமாக இருப்பது தான் இந்த பரிகாச நிலைக்குக் காரணம்.

பொருத்தமற்றவர்கள் பொருத்தமற்ற இடங்களுக்காகத் தெரிவு செய்யப்படுகின்ற போது. அவர்கள் பொருத்தமற்ற நடவடிக்கைகளைத் தான் முன்னெடுப்பார்கள். அது தான் தற்போது ஒவ்வொரு அபிவிருத்தி குழுக் கூட்டத்திலும் பாராளுமன்றத்திலும் அரங்கேறி வருகின்றது. யாழ்ப்பாண அபிவிருத்தி குழுக் கூட்டங்களில் பங்குகொள்ளும் இராணுவ அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தமிழ் பிரதிநிதிகளின் சண்டைகளைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டிருக்கின்றனர்.

எந்தளவுக்கு இழிநிலைக்குள் தமிழ் சமூகம் தள்ளப்பட்டிருக்கிறது. இதற்கான காரணம் என்ன? தமிழ் மக்களை வெறும் தேசியவாத சுலோகத்தை முன் வைத்து அணி திரட்ட முற்பட்டது தான் இன்றைய அனைத்து வித மான அவல நிலைக்கும் காரணம். தமிழ் மக்களை ஒன்று திரட்ட வேண்டும், ஒன்றுதிரட்டுவது தான் தமிழ்த் தேசியம் என்றவாறான தவறான கருத்துகளை விதைத்தவர்களும் இந்த அவல நிலைக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களாவர்.

மக்களை வசியப்படுத்துவதற்கு எவ்வாறான மலினமான விடயங்களையும் தேசியத்தின் பெயரால் செய்யலாம் என்னும் நிலைமையே இன்று ஏற்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் முட்டாள்தனமாக பேசினால் அதனை தவறு என்று விமர்சிப்பதை விடவும் அற்புதமாக வெளுத்து வாங்கினீர்கள் என்று கூறி, சன்மானம் கொடுப்பதற்கு புலம்பெயர் சூழலில் ஒரு கூட்டம் உருவாகியிருக்கிறது. அவர்களும் இவ்வாறான அவல நிலைக்கு முக்கிய காரணமாவர்.

இந்த இடைவெளியை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வோர் தமிழ் மக்கள் மத்தியில் எவ்வித அர்ப்பணிப்பும் இல்லாமல் தலைவர்கள் ஆகிவிடலாம் என்னும் நிலைமை உருவாகி விட்டது. இந்தப் பின்புலத்தில் தான் முகநூல்களில் தொடர்ந்து பரபரப்பான காணொலிகளை வெளியிடுபவர்கள், விடுதலைப் புலிகள் தொடர்பில் முகநூல்களில் பதிவிடுபவர்கள் அனைவரும் உடனடி கதாநாயகர்களாகி விடுகின்றனர். இந்த அவல நிலைக்கு முதல் காரணம் சிந்திக்காமல் வாக்களிக்கும் மக்கள். இரண்டாவது காரணம் இவ்வாறான முட்டாள் தனங்களை இரசிக்கும் புலம்பெயர் மனோபாவம்.

# சரணடையும் புலிகளின் தலைவர்களைக் கொலை செய்யுமாறு உத்தரவிட்டவர் சவேந்திர டி சில்வா என பிரிட்டன் தெரிவிப்பு



சரணடையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களை கொலை செய்ய வேண்டும் என உத்தரவிட்டவர் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி கட்டங்களில் 58 வது படையணியின் தளபதியாக விளங்கிய சவேந்திர சில்வா என பிரிட்டன் தெரிவித்துள்ளது. இலங்கையின் முன்னாள் இராணுவ தளபதிகள் கடற்படை தளபதி மற்றும் விநாயகமூர்த்தி முரளீதரன் மீதான தடைகளிற்கான காரணங்களை தெளிவுபடுத்தும் ஆவணமே இவ்வாறு தெரிவித்துள்ளது.

சவேந்திர சில்வா தனிநபரின் வாழ்வதற்கான உரிமை சித்திரவதைக்கு உட்படுத்தப்படாமலிருப்பதற்கான உரிமை ஈவிரக்கமற்ற அல்லது மனிதாபிமானமற்ற விதத்தில் நடத்தப்படாமலிருப்பதற்கான இழிவான விதத்தில் நடத்தப்படாமலிருப்பதற்கான அல்லது தண்டிக்கப்படாமலிருப்பதற்கான உரிமையை பாரதூரமாக மீறும் நடவடிக்கைகளிற்கு காரணமாக இருந்துள்ளார். இருக்கின்றார் என்ற அடிப்படையில் உலகளாவிய மனித உரிமைகள் தடைகள் 2020 இன் அர்த்தங்களுடன் சவேந்திர சில்வா சம்பந்தப்பட்ட நபராகும்.

சவேந்திர சில்வா இலங்கை இராணுவத்தின் 58வது பிரிவின் தளபதியாக செயற்பட்டார் இக்காலப்பகுதியில் 58வது படைப்பிரிவினர் சட்டவிரோத படுகொலைகள், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது டன் சித்திரவதை ஈவிரக்கமற்ற நடவடிக்கைகள் கீழ்த்தர மான நடவடிக்கைகள் தண்டனைகளை வழங்குதல் போன்றவற்றில் ஈடுபட்டனர்.

சரணடையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களை கொலை செய்ய வேண்டும் என உத்தரவிட்ட சவேந்திர சில்வா சரணடைந்த விடுதலைப்புலிகளை தனது படையினர் சுட்டுக்கொன்ற வேளை போர் முன்னரங்கிலேயே காணப்பட்டார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# தையிட்டி சட்டவிரோத விகாரையில் கட்டப்பட்ட கட்டிடத்தை திறந்து வைத்த வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர்

யாழ்ப்பாணத்தில் தையிட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையான திஸ்ஸ விகாரையில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட மண்டபம் 23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தனபாலவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தையிட்டி பகுதியில் தனியார் காணிகளை சட்டவிரோதமான முறையில் கையகப்படுத்தி சட்டவிரோதமான முறையில் விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ள நிலையில் விகாரையை அகற்றி, தமது காணிகளை தம்மிடம் கையளிக்குமாறு காணி உரிமையாளர்கள் கோரி வருவதுடன் போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இருந்த போதிலும், விகாரை நிர்வாகம், இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன், மடாலயம் ஒன்றினை எவ்வித அனுமதியும் பெறாது சட்டவிரோதமான முறையில் அமைத்து நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து



வைக்கப்பட்டது. சட்ட ஒழுங்கை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய பொலிஸார் அசமந்தமாக செயற்பட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில், சட்ட விரோத கட்டடத்தை வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தனபால திறந்து வைத்துள்ளார்.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபடும் மக்களை தொடர்ந்தும் பொலிஸார் அச்சுறுத்தி வருகின்றனர். தமது காணிகளை கேட்டு போராடும் மக்களுக்கு எதிராக பிணையில் வெளியில் வர முடியாத சட்டத்தின் கீழ் வழக்குகளை தொடரவும் முயற்சித்து வந்தனர்

இந்நிலையில் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு எதிராக கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் மனிதவுரிமை ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் தற்போதே மனித உரிமை ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவ்வாறான, நிலையில் விகாரை நிர்வாகத்தின் சட்ட ரீதியற்ற செயற்பாடுகளுக்கு பொலிஸார் தொடர்ந்தும் துணை போவது குறித்து காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# அமைச்சர் காணி உரிமையாளர்களை கொழும்புக்கு அழைத்து தீர்வை விரைவில் முன் வைப்பதாகத் தெரிவிக்கும் போது காணியில் புதிய கட்டிடம் திறக்கப்படுகின்றது



யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்ட விரோதமாக விகாரை அமைக்கப்பட்டிருக்கின்ற அந்த வளாகத்திற்குள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டட திறப்பு நடைபெற விருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ள நிலையில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட தையிட்டி காணி உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அனுர அரசாங்கத்தின் அமைச்சர் எங்களை கொழும்பிற்கு அழைத்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு விரைவில் தீர்வை தருவதாக சொல்லியுள்ள அதே சந்தர்ப்பத்தில் தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டுள்ள வளாகத்திற்குள் புதிய கட்டட திறப்பு இடம்பெற்றுள்ளது..

இது வேதனைக்குரிய விடயம் என தெரிவித்துள்ள காணி உரிமையாளர் ஒருவர் தமிழ் மக்கள் இதனை புரிந்து கொள்ளா விட்டால் இதுபோன்று பல விடயங்கள் இடம் பெறும் என தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

பௌத்த சாசன அமைச்சர் அவருடைய அலுவலகத்தில் வைத்து ஒரு மக்கள் சந்திப்பை ஒழுங்கு செய்தார், அவர் அங்கு தெளிவாக சொல்லியிருந்த விடயம் மக்களின் காணிகள் என்றால் மக்களிற்கே கையளிக்க வேண்டும் என்றும் இது தங்கள் அரசாங்கத்தின் கொள்கை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதன் அடிப்படையிலே நாங்கள் உறுதிகள் உட்பட அனைத்து ஆதாரங்களையும் அவரிடம் காட்டியிருந்தோம். இது தங்களுடைய விடயங்களிற்கு பொறுப்பானதல்ல காணி அமைச்சிற்கும் பொறுப்பானது என அமைச்சர் தெரிவித்திருந்தார். அவர்களும் இந்த விடயம் குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இதற்குரிய முடிவை எவ்வளவு விரைவாக வழங்க முடியுமோ அவ்வளவு விரைவாக வழங்க முயல்கின்றோம் என அவர் சொல்லியுள்ள நிலையில் அவருடைய அரசாங்கம் யாருக்கும் தெரியாமல் இரகசியமாக புதிய கட்டடத்தை திறக்க முயல்வது மன வருத்தத்திற்குரிய விடயம்.

மக்கள் இதனை உணரா விட்டால் இது போல பல விடயங்கள் நடக்கும் சகல மக்களும் இந்த போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

# ஐ.நா.வில் புதிய பிரேரணையை ஏற்கப் போவதில்லை! பிரிட்டன் பிரதிநிதியிடம் அரசாங்கம் நேரடியாக தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதக் கூட்டத்தொடரின்போது பிரித்தானியாவால் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அந்நாட்டுப் உயர் பிரதிநிதியிடத்தில் இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளதாக உயர்மட்டத்தகவல்கள் தெரிவிக்கின்றன. குறித்த தகவல்களின் அடிப்படையில்,

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தோ-பசிபிக் பிராந்திய பணிப்பாளர் பென் மெல்லருக்கும், இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டக்குழுவினருக்கும் இடையிலான உள்ளகச் சந்திப்பு 23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் போது எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் 'இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் புதிய பிரேரணையொன்றை கொண்டு வருவதற்கு இணை அனுசரணை நாடுகளின் பிரதானியான பிரித்தானியா தீர்மானித்துள்ளமையை அந்நாட்டு பிரதிநிதியான பென் மெல்லர் வெளிப்படுத்தியுள்ளார். இந்நிலையில் குறித்த தீர்மானத்துக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் ஆதரவளித்தல் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடுகளையும் அவர் கோரியுள்ளார்.

இதன் போது இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டக்குழுவினரால் இலங்கை இறைமையுள்ள நாடு என்ற வகையில் வெளிநாடுகளினால் முன்மொழியப்படுகின்ற தீர்மானத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அந்த வகையில் பிரித்தானியா தலைமையில் கொண்டு வரவுள்ள புதிய பிரேரணையை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் நேரடியாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போதைய அரசாங்கமானது 'உள்நாட்டு தேசிய பொறிமுறையை' முன்னெடுப்பதில் அர்ப்பணிப்பைக் கொண்டிருப்பதாகவும், அதற்கான நடவடிக்கைகளை பொருளாதார நெருக்கடிகள் குறைந்தவுடன் முன்னெடுக்கவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 19 வயதில் கைது செய்யப்பட்ட 2 பேர் 30 வருடங்களாக சிறையில்

பத்தொன்பது வயதில் கைது செய்யப்பட்ட சிவகுமார் பார்த்தீபன் என்ற இருவர் ,முப்பது வருடங்கள் கடந்தும் இன்று 50 வருடங்கள் ஆகியும் விடுதலையடைய முடியாமல் சிறையில் உள்ளனர் என தெரிவித்துள்ள மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ்காந் ஆனால் அரசியல் கைதிகள் விடுதலை குறித்து வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் என்பிபி தோழர்கள் பொய்யான வாக்குறுதிகளுடன் மீண்டும் தேர்தலிற்காக களத்தில் குதித்துள்ளனர் என தெரிவித்துள்ளார்

மகசின் சிறைச்சாலைக்கு சென்று தமிழ்அரசியல்கைதிகள் சிலரை பார்த்த பின்னர் கருத்து தெரிவிக்கையில் இதனை குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

என்பிபி அரசாங்கம் ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் வந்து ஆறு மாதங்களிற்கு மேல் ஆகிவிட்டது, இந்த



ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக மக்களிற்கு சில உறுதி மொழிகளை வழங்கியிருந்தார்கள்.(22ம் பக்கம் பார்க்க)

# கனடா வாழ் கருணையாளர்களே!





என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந்தைகளின் அன்பு நிறைந்த இடமாக அன்பு இல்லம். பாரதி இல்லம். செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இலங்கங்கள் திகழ்கின்றன.

மூன்று வேளை உணவு. உடை. உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு. பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள்.

அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் போல் பலர் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முன் வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விட்டப்பட்டு வருகின்றன. ஆனால் எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே பிரதான காரணமாகும்.

உறவுகளே! உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! ஒரு இல்லத்துக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஒரு நாளுக்கு 200.00 டொலர்கள் மட்டுமே. ஒரு நாள் உணவளிக்க முடியாதோர் ஒரு வேளை உணவுக்கு 100.00 டொலர்கள் தாருங்கள். மேலதிக விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் பார்க்கலாம். ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி 14 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. தொடர்புகளுக்கு பரமேஸ் 416 841 9600

எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்ற கவலையை விடுவோம்! ஒரு குழந்தைகளுக்கு உணவளித்தோம் என்று மகிழ்வோடு வாழ்வோம். வாருங்கள்! இணையுங்கள்!

# யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் பட்டம் பெற்ற தேரர்!

யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழில் பட்டப்பின் டிப்ளோமாவைப் பயின்று பௌத்த தேரர் ஒருவர் பட்டம் பெற்றுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 39 ஆவது பட்டமளிப்பு விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் கடந்த 21 மார்ச் 2025 வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

இதில் முதலாவது அமர்வின் போது சன்னாஸ்கம இந்திரானந்த தேரர் என்ற பௌத்த தேரரே இந்த பட்டம் பெற்றுள்ளார். உயர்பட்டப் படிப்புகள் பீடத்தினால் நடாத்தப்பட்ட தமிழில் பட்டப்பின் தகைமைக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து அவர் இந்த பட்டம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவினால் சம்பிரதாய பூர்வமாக இவரது பட்டம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஓய்வு பெறவே மாட்டேன் - டக்ளஸ் பிடிவாதம்



அரசியலில் இருந்து ஒதுங்கப் போவதாக கூறி வந்த டக்ளஸ் தற்போது அதனை கைவிடுவதாக அறிவித்துள்ளார். உடல் நிலை காரணமாக அரசியலில் இருந்து ஒதுங்குவது தொடர்பாக கடந்த சில வருங்களாக சிந்தித்த போதிலும். கடந்த வருடம் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவை சவாலாக எடுத்து செயற்பட்டு வருவதாகவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களைப் போன்று விடயங்களை முன்னெடுப்பதற்கான அரசியல் அதிகாரம் தற்போது இல்லாத போதிலும். அண்மைய அரசியல் பின்னடைவை சவாலாக எடுத்து அரசியலில் தொடர்ந்தும் ஈடுபடுவதாகவும் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற தேர்தலின் பின்னராக நடைப்பிணமாக டக்ளஸ் மாறியிருப்பதாக அவரது கட்சி ஆதரவாளர்கள் கவலை கொண்டுள்ளனர்.

இதேவேளை கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்ற முடியாத ஆட்சியாளர்கள் புழுகு மூட்டைகளுடன் உள்ளூராட்சி தேர்தலுக்கு தயாராகி வருவதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். கட்சியின் தலைமை காரியாலயமான ஸ்ரீதரில் 22 மார்ச் 2025 இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றின் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். கடந்த எமது ஆட்சியில் வாயைக் வயிற்றைக் கட்டி சேமித்த பணத்தையே தற்போதைய ஆட்சியாளர்களினால் தங்களின் பொருளாதார மீட்சியாக காட்சிப்படுத்தப்படுகிறது என்று தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா. கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்ற முடியாத ஆட்சியாளர்கள் புழுகு மூட்டைகளுடன் உள்ளூராட்சி தேர்தலுக்கு தயாராகி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையான தமிழ் தேசியத்தினை பாதுகாக்கும் யதார்த்தமான தரப்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியே செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். குறிப்பாக தற்போது கடந்த காலங்களைப் போலல்லாது அரசியல் தளம் மாற்றமடைந்துள்ளது. இது தமிழ் தரப்பினரின் அரசியல் களத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய சூழலையும் உருவாகியுள்ளது எனவும் கூறியுள்ளார்.

# பேச்சில் அறிவும் நிதானமும் தேவை

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சாணக்கியன் இராசமாணிக்கம். மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கடந்த காலத்தில் வங்கிக் கொள்ளைகளில் ஈடுபட்டதாகவும் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள். திருடர்கள் பற்றி பேச முடியுமா என்னும் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் பேசியிருக்கின்றார்.

சாணக்கியன் வயதிலும் அனுபவத்திலும் தமிழ் அரசியலில் மிகவும் சிறியவர். ஈழத் தமிழர் ஆயுதப் போராட்ட அரசியலின் சாட்சியாக இப்போதும் சிலர் இருக்கின்றனர். அவர்களிடம் கேட்டால் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் தமிழ் ஆயுத இயக்கங்கள் எவ்வாறு நிதியை திரட்டின என்பதை நினைவுபடுத்துவார்கள். வங்கிக் கொள்ளைகளில் ஈடுபடாத பிரதான இயக்கங்கள் எவையும் இல்லை.

நீர்வேலி வங்கிக் கொள்ளை அன்றைய காலத்தில் புகழ்பெற்ற வங்கிக் கொள்ளைகளில் ஒன்று. தமிழ் ஆயுத இயக்கங்களின் ஆரம்பகால வங்கிக் கொள்ளைகளை சிறிலங்கா அரசு. திருட்டு என்றே அடையாளப்படுத்தியது ஆனால் தமிழ் அரசியலில் சூழலில் அவற்றை எவருமே திருட்டு என்றோ. பெடியங்கள் திருட்டு நடவடிக்கையில் ஈடுபடுகின்றார்கள் என்றோ நோக்கியதில்லை. காரணம் அன்றைய சூழலில் ஆயுதப் போராட்டத்தின் ஓர் அங்கமாகவே அரசின் வளங்களை சூறையாடும் நடவடிக்கை நோக்கப்பட்டது.

பிற்காலங்களில் அவ்வாறான நடவடிக்கைகளில் இயக்கங்கள் ஈடுபடவில்லை. இந்திய — இலங்கை ஒப்பந்த காலத்தில் இயக்கங்களுக்குத் தேவையான நிதியை இந்தியா வழங்கியது. வரலாறு இவ்வாறிருக்கின்ற போது தென்னிலங்கையில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பியின் வங்கிக் கொள்ளையை திருட்டு என்று குறிப்பிடுவதானது. அரசியல் வரலாறு தொடர்பான அறிவற்ற செயலாகவே நோக்க வேண்டியிருக்கின்றது.

புதிதாக அரசியல் காற்றை சுவாசிப்பவர்கள் அந்தக் காலகட்ட வரலாறு பற்றி அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். தங்களுக்குத் தெரியா விட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அரசியல் ரீதியில் ஜே.வி.பி. தொடர்பில் விமர்சிப்பதற்கு விடயங்கள் இருந்தால் அது தொடர்பில் குறிப்பிடலாம். இனப்பிரச்னை தொடர்பில் அவர்களது நிலைப்பாட்டிலுள்ள குறைபாடுகளை சுட்டிக் காட்டலாம். அவர்களது பொருளாதார திட்டங்களிலுள்ள குறைபாடுகளை சுட்டிக் காட்டலாம் அது அவசியமும் கூட. ஆனால் அவர்களது ஆயுதக் கிளர்ச்சியின் போது மேற்கொண்ட விடயங்கள் தொடர்பில் ஈழத் தமிழர் அரசியலை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் பேசுவது பொருத்தமானதல்ல தவிர அது அரசியல் நாகரீகமும் அல்ல.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர்கள் என்போர் கட்சியில் புதிதாக இணைந்து கொண்டவர்களுக்கு அரசியல் வகுப்புகளை எடுக்க வேண்டியது அவசியமானது. ஏனெனில். ஜே.வி.பியின் கடந்த கால நடவடிக்கைகளை திருட்டு என்னும் ஒரு சொல்லால் அழைக்கும் போது. அது மறு புறமாக அன்றைய காலத்தில் வங்கிக் கொள்ளைகளில் ஈடுபட்ட தமிழ் ஆயுத இயக்கங்களின் மீதும் தான் விரல் நீட்டும். இயக்க காலத்தின் நிதிசேகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பொது வெளிகளில் பேசினால் பெரும் சிக்கல்கள் ஏற்படும்.


வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

எதிர்பாருங்கள்! ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா 01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை
விபரங்கள் உள்ளே!

# இலங்கையை பொறுப்புக் கூறச் செய்வதற்கு உயர் வழிமுறைகளை கையாள வேண்டுமென ஜெனிவாவில் அனந்தி சசிதரன் வலியுறுத்து



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையானது இலங்கையை பொறுப்புக்கூறச் செய்வதற்கான உயர் வழி முறைகளை கையாள வேண்டும் என்று வடமாகாண முன்னாள் அமைச்சரும், ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பொதுச்செயலாளருமான அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் இடம் பெற்ற பிரிவு நான்கு நிகழ்ச்சி நிரலான 'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கவனம் தேவைப்படும் மனித உரிமைகள் சூழ்நிலைகள்' என்ற தலைப்பின் கீழ் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கவனம் தேவைப்படும் மனித உரிமைகள் சூழ்நிலைகள்' 2009ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட சர்வதேச குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் செய்யப்படவில்லை. பொறுப்புக் கூறலைச் செய்வதற்காக இலங்கை அரசாங்கத்துக்கு நேரமும், காலமும் வழங்கப்படுகின்றது. இலங்கை குறித்து தீர்மானங்களை நிறைவேற்றியவர்கள் தங்கள் புவிசார் அரசியலுக்கு ஏற்றவாறு தீவில் ஆட்சி மாற்றங்களைச் செய்வதற்கே அதனைப் பயன்படுத்தியுள்ளனர்.

இலங்கையில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்திருந்தாலும், தற்போது வரையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கில் ஆதாரங்களைச் சேகரிப்பதற்கானதொரு அதிகார பூர்வமான கட்டமைப்பை அங்கு நிறுவுவதற்கு முடியவில்லை. இதுவொரு மிகப்பெரிய குறைபாடாகும். ஏனெனில் மின்னஞ்சல் மற்றும் பிரதிநிதிகளினால் செய்யப்பட்ட ஏற்பாடுகள் மூலம் மட்டுமே ஆதாரங்களை சேகரிக்க முடியுமான நிலைமையே தற்போது உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து ஆதாரங்களைச் சேகரிப்பதற்கானதொரு சரியான பொறிமுறையை நிறுவுவதற்குத் தவறி விட்டது. எனவே 'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கவனம் தேவைப்படும் மனித உரிமைகள் சூழ்நிலைகள்' என்ற நிகழ்ச்சி நிரலின் கீழ் அதைக் கொண்டு வருமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இலங்கை அரசாங்கமானது ஐ.நா.வின் தீர்மானங்களுடன் ஒத்துழைக்கத் தவறியிருப்பதோடு, அதன் உறுதி மொழிகளில் இருந்து பின்வாங்கியும் உள்ளது. ஆகவே இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறலைச் செய்வதற்காக பேரவையானது உயர் வழி முறைகளை உள்ளடக்கிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

# இலங்கையில் அதிகரிக்கும் துப்பாக்கிச் சூடு! தடுப்பு நடவடிக்கை குறித்து ஜனாதிபதி நடத்திய கூட்டம்?

இலங்கையில் திட்டமிட்ட குற்றச் செயல்களினால் நடத்தப்படும் துப்பாக்கி பிரயோகங்களின் எண்ணிக்கை சமீபத்திய காலங்களில் அதிகரித்துள்ளது. இந்த நிலையில், இலங்கை தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் 21 மார்ச் 2025 வெள்ளிக்கிழமை இரவு நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

மாத்தறை வரலாற்று சிறப்பு மிக்க தேவேந்திரமுனை ஸ்ரீவிஷ்ணு ஆலயத்திற்கு முன்பாக இந்த துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இரண்டு இளைஞர்களை இலக்கு வைத்து இந்த துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

சிறிய ரக வேன் ஒன்றில் வருகை தந்த அடையாளம் தெரியாத நபர்களினால் இந்த துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. ரி-56 ரக துப்பாக்கி மற்றும் கைத்துப்பாக்கி ஆகிய இரண்டு துப்பாக்கிகளை பயன்படுத்தி இந்த துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டுள்ளமையும் ஆரம்பகட்ட விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட இடத்திலிருந்து ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் மற்றும் கைத்துப்பாக்கியொன்றின் துப்பாக்கி ரவைகள் போலீஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

தேவேந்திரமுனை கப்புகம்புர பகுதியில் இடம்பெற்ற பிறந்தநாள் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு வீடு திரும்பிய இரண்டு நண்பர்களை இலக்கு வைத்தே இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை துப்பாக்கி சூட்டை நடத்துவதற்காக சந்தேக நபர்கள் வருகை தந்த வேன் துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட இடத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்திலுள்ள குறுக்கு வீதியொன்றில் தீக்கிரையான நிலையில் போலீஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. துப்பாக்கி பிரயோகத்தை நடத்திய சந்தேக நபர்கள், வேனை தீக்கிரையாக்கி, அங்கிருந்து தப்பிச் சென்றிருக்கலாம் என போலீஸார் சந்தேகம் வெளியிடுகின்றனர்.

இந்த துப்பாக்கி பிரயோகத்தை நடத்திய சந்தேக நபர்கள் மற்றும் துப்பாக்கி பிரயோகத்தை நடத்துவதற்கான காரணம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என போலீஸார் குறிப்பிடுகின்றனர். இந்த துப்பாக்கி பிரயோகம் தொடர்பிலான விசாரணைகளை நடத்துவதற்காக போலீஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2025ம் ஆண்டின் தொடக்கம் முதல் 21 மார்ச் 2025 அதிகாலை வரை பதிவான தகவல்களின் பிரகாரம், 27 துப்பாக்கி பிரயோகங்கள் நடத்தப்பட்டுள்ளதாக போலீஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம், தெரிவித்தது.

இந்த துப்பாக்கி பிரயோக சம்பவங்களில் இதுவரை 22 பேர் உயிரிழந்துள்ளதுடன், 13 பேர் காயமடைந்துள்ளனர். இவ்வாறு பதிவான துப்பாக்கி பிரயோக சம்பவங்களில் 18 சம்பவங்கள் திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவை என போலீஸ் விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

ஏனைய 9 துப்பாக்கி பிரயோகங்களும் தனிப்பட்ட காரணங்களினால் நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகங்கள் என போலீஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிடுகின்றது. இவ்வாறு நடத்தப்பட்ட அனைத்து துப்பாக்கி பிரயோகங்களிலும் இதுவரை 76 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கி பிரயோக சம்பவங்களுடன் நேரடியாக மற்றும் மறைமுகமாக தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக போலீஸார் குறிபபிடுகின்றனர். கொழும்பு புதுகடை நீதவான் நீதி



மன்ற விசாரணை கூட்டில் விசாரணைக்காக நின்றுகொண்டிருந்த தருணத்தில், வழக்கறிஞர் வேடத்தில் வருகை தந்த துப்பாக்கிதாரியினால் நீதிமன்றத்தில் வைத்து இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டிருந்தது.

நீதிமன்றத்துக்குள் வைத்து துப்பாக்கி சூடு நடத்தப்பட்டமையானது, நாட்டில் பாரிய சர்ச்சையை தோற்றுவித்திருந்தது. இந்த நிலையில், இந்த துப்பாக்கி சூட்டை நடத்திய சந்தேக நபர்கள், நீதிமன்ற வளாகத்திலிருந்து தப்பிச் சென்ற போதிலும், 8 மணி நேரத்துக்குள் கைது செய்யப்பட்டனர். எனினும், இந்த சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாக விளங்கிய இஷாரா செவ்வந்தி என்ற பெண்ணை கைது செய்வதற்கான விசாரணைகளை போலீஸார் தொடர்ந்தும் நடத்தி வருகின்றனர்.

இஷாரா செவ்வந்தி, இந்தியா அல்லது மாலத்தீவுக்கு கடல் வழியாக சட்ட விரோதமான முறையில் தப்பிச் சென்றிருக்கலாம் என போலீஸார் சந்தேகிப்பதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

அத்துடன், கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இவ்வாறான துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றது. இவ்வாறு இடம் பெறுகின்ற திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் போலீஸ் அதிகாரிகள், ராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற சிப்பாய்கள் தொடர்புபட்டுள்ளமையை போலீஸார் உறுதி செய்துள்ளதுடன், சிறைச்சாலை அதிகாரிகள் குறித்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இலங்கையில் இடம் பெற்று வரும் திட்டமிட்ட குற்றங்களை தடுக்கும் நோக்கில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கும், போலீஸ் உயர் அதிகாரிகளுக்கும் இடையில் கடந்த 18ம் தேதி விசேட கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

திட்டமிட்ட குற்றச் செயல்கள் அதிகளவில் இடம்பெறும் மேல் மற்றும் தென் மாகாண போலீஸ் உயர் அதிகாரிகளையே ஜனாதிபதி இவ்வாறு சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார்.

திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது மட்டுமல்லாது, புதிய சட்டங்களை கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இதன்போது தெரிவித்துள்ளார். சட்ட ஆட்சியை பாதுகாக்கும் பொறுப்பு, போலீஸ் திணைக்களம் வசமானது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# கனடாவை இறையாண்மை கொண்டா நாடாக மதிக்கும் வரை ட்ரம்புடன் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை - பிரதமர்




அமெரிக்காவின் வரிவிதிப்பால் பாதிக்கப்பட்ட கனடா நாட்டு வணிகர்களை அந்நாட்டு பிரதமர் மார்க் கார்னி சந்தித்து பேசினார். மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகுப்புகளையும், வளத் திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளையும் கார்னி அறிவித்தார்.

இதன் பின்னர் கனேடிய போர் அருங்காட்சியகத்தில் அவர் பேசியதாவது வர்த்தகப் போரினால் அமெரிக்கர்கள் பாதிக்கப்படுவதால். அதனைத் தடுக்கும் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விரும்புவார்.

அவர்கள் எப்போது வந்தாலும் அதற்கு நான் தயாராக இருக்கி. றேன். இருப்பினும் இறையாண்மை கொண்ட நாடாக கனடாவுக்கான மரியாதை கிடைக்கும் வரையில் ட்ரம்ப்புடன் பேச்சுவார்த்தை நடக்காது என்று தெரிவித்தார்.

அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக கனடா இருக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும் கனடா அரசு அதனை மறுத்து வருகிறது. இதனிடையே கனடா மீது அமெரிக்கா அதிகளவிலான வரி விதித்ததையொட்டி அமெரிக்கா வர்த்தகப் போரை விரும்புவதாக பலரும் கூறினர்.

கனடாவின் புதிய பிரதமராக மார்க் கார்னி கடந்த மார்ச் 14 ஆம் திகதியில் பதவியேற்ற நிலையில் இது வரையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம் தொலைபேசியில் கூட தொடர்பு கொள்ளவில்லை. அதுமட்டுமின்றி முன்னாள் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை ஆளுநர் என்று ட்ரம்ப் கூறியிருந்தாலும் தற்போதைய பிரதமர் மார்க் கார்னி குறித்து ட்ரம்ப் எதுவும் கூறவில்லை.

# அவசியம் ஏற்பட்ட போது ஆயுதம் ஏந்தினோம்! ஜே.வி.பி. செயலாளர் டில்வின் சில்வா தெரிவிப்பு!



ஐக்கிய தேசியக் கட்சி இந்த மாபெரும் படுகொலையைச் செய்துள்ளது என்றும், அறுபதாயிரம் பேரைக் கொன்று, எங்கள் கட்சியைத் தடை செய்த அவர்களுக்கு எதிராக நாங்கள் போராடினோம் எனவும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், ஆயுதங்களை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்ட போது நாங்கள் ஆயுதங்களை எடுத்தோம் எனவும் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார். பத்திரிகை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறியுள்ளார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

ஜனநாயக அரசியலை மேற்கொண்ட எங்கள் கட்சி, 1983 கருப்பு ஜீலை மற்றும் ஐ.தே.க. தொடங்கிய கருப்பு ஜஜீலையை அடிப்படையாகக் கொண்டு, அநீதியான மற்றும் சட்டவிரோத தடையை அடிப்படையாகக் கொண்டு கட்சியைத் தடை செய்தது.

மேலும் எங்களை அடக்கத் தொடங்கியது என்பதை நாங்கள் மிகத் தெளிவாகக் கூறியுள்ளோம்.

மறுபுறம், இந்திய-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, நாங்கள் அதற்கு எதிராக ஆயுதம் ஏந்தினோம். நாங்கள் அதை ஏற்றுக் கொண்டோம். அன்று நாங்கள் அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்தினோம்.

துப்பாக்கிச் சண்டை நடந்தது. ஒரு உள்நாட்டுப் கலவரம் வெடித்தது. ஆயுதங்களை வைத்து அரசியல் செய்யும் போது இரு தரப்பினரும் இறக்கின்றனர்.

அதில், எங்கள் தரப்பில் சிலர் நடை பெற கூடாத சில விடயங்களைச் செய்திருப்பதை நாங்கள் ஒப்புக் கொண்டுள்ளோம். மேலும் பொறுப்பு ஒரு தனிநபரிடம் அல்ல, ஒரு வணிகத்திடம் உள்ளது என்பதை நாங்கள் அறிவோம்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி இந்த மாபெரும் படுகொலையைச் செய்து. அறுபதாயிரம் பேரைக் கொன்று, எங்கள் கட்சியைத் தடை செய்து, தடையைப் பேணி, எதிரிகளைக் கொன்ற வரலாற்றைக் கொண்டுள்ளது.

அப்போது அமைச்சர் பதவிகளை வகித்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அங்கு இருந்தார். எனவே, இந்த உள்நாட்டுப் கலவரத்தின் பொறுப்பு, அதை தொடங்கிய நபரிடமே உள்ளது.

நாங்கள் அந்த உள்நாட்டுப் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள். நாங்கள் போராட வேண்டியிருந்தது. நாங்கள் சண்டையிட்டோம். உலகம் முழுவதும் அதுதான் நடந்திருக்கிறது.

மக்கள் இரு புறமும் சண்டையிட்டனர். எனக்கு ஆயுதப் பயிற்சி இல்லை. எனக்கு அரசியல் பயிற்சி உண்டு. ஆயுதம் ஏந்த வேண்டியிருந்த போது நாங்கள் ஆயுதம் ஏந்தினோம்.

நம் நாட்டில், விடுதலைக்காகப் போராடிய வீர புராணப்பு ஒரு தேசிய நாயகன் என்று நான் நினைக்கிறேன். பிரச்சினை இந்த ஆயுதங்களை எடுப்பது பற்றியது அல்ல. சுனில் அரியரத்னவும் ஒரு பாடலை எழுதியுள்ளார். இந்தப் பாடலை விஜய குமாரதுங்க பாடியுள்ளார்.

அவர்கள் சண்டைக்கு எதிராக ஆயுதம் ஏந்தவில்லை என்றால், அவர்கள் மனிதர்களே அல்ல. அநீதி நடந்தால், அதை எதிர்த்துப் போராடு வோம். நாம் ஒரு ஜனநாயகத்தில் இருந்தால், ஜனநாயகத்திற்காகப் போராடுவோம் என அந்த பாடல் உள்ளது என்றார்.

எதிர்பாருங்கள்!
ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா
01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை

# புதிய அரசியல் கலாசாரத்துக்கு தகுதியற்ற மக்கள் கூட்டம்!

முன்னர் இருந்த அரசியல் சூழல் இப்போது முற்றிலுமாகவே இல்லாமல் போய்விட்டது. முன்னைய அரசியல் சூழல் இப்போது இல்லை என்னும்போது, முதலில் புரிந்து கொள்ள வேண்டிய அடிப்படையான விடயம் என்னவென்றால், முன்னைய வாய்ப்புகள் எவையும் தற்போது இல்லை. இதனை இன்னும் இலகுவாகக் கூறுவதானால், வாய்ப்புகளை தவற விட்டால் அல்லது வாய்ப்புகளை புரிந்து கொள்ள முடியாது தவறிழைத்தால் அந்த வாய்ப்புகள் மீண்டும் ஒரு போதும் கிடைக்காது. பின்னர் வாய்ப்புகள் கிடைத்தாலும் கூட அவை முன்னைய வாய்ப்புகள் போன்று இருக்காது இருக்கவும் முடியாது.

இந்த அடிப்படையில் நோக்கினால் அரசியல் அர்த்தத்தில், ஈழத் தமிழினத்துக்கு இப்போது எந்த வாய்ப்பும் இல்லை. வாய்ப்புகள் புதிய அரசியல் சூழ்நிலைகளால் மட்டும்தான் உருவாகும். அவ்வாறான புதிய அரசியல் சூழலானது ஒரு நெருக்கடியின் விளைவாகவும் ஏற்படலாம். அல்லது தேவையிலிருந்தும் ஏற்படலாம். இந்த அடிப்படையில் நோக்கினால், இலங்கை ஒரு வரலாற்று பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்தது. வங்குரோத்தை பிரகடனம் செய்தது. இப்போதும் அதிலிருந்து முழுவதுமாக மீண்டு வந்து விட்டதாகக் கூறமுடியாது.

ஆனாலும் இவ்வாறானதொரு நெருக்கடியான அரசியல் சூழலில் கூட ஈழத் தமிழரின் உரிமைசார் கோரிக்கைகள் ஒரு பொருட்டாகக் கொள்ளப்படவில்லையே ஏன்? பொருளாதார பிரச்னைக்கான வேர் இனப்பிரச்னைக்கான தீர்வில் தான் தங்கியிருக்கிறது. எனவே அதற்கான நியாயமான தீர்வைக் காணாது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியாது. இதனை சர்வதேச நாணய நிதியம் உணர வேண்டும் என்றெல்லாம் ஈழ அரசியல்வாதிகளும் சிவில் சமூகமாக தங்களை காண்பித்துக் கொள்பவர்களும் உரத்து சத்தமிட்டனர். ஆனால், அதனை எவருமே பொருட்படுத்தவில்லை.

இது எதனைக் காண்பிக்கின்றது? அரசியல் சூழ்நிலை முற்றிலுமாக மாறிவிட்டது. இன்றைய உலக அரசியல் சூழலில் மனித உரிமை சார்ந்த விடயங்கள் கீழ் நிலைக்குச் சென்றுவிட்டது. பலம் பொருந்திய நாடுகளின் நலன்சார் போட்டி மேல் நிலைக்கு வந்துவிட்டது. இந்த நிலையில் மனித உரிமை என்று வெறுமனே கூறிக் கொண்டு தற்போதைய உலக அரசியல் சூழலில் விடயங்களைக் கையாள முடியாது. இந்த விடயங்களை எல்லாம் புரிந்து கொண்டு அதற்கேற்ப ஈழ அரசியலை முன்னெடுக்கும் வல்லமையுடன் அரசியல் கட்சிகளோ, அரசியலாளர்களோ இல்லை.

தற்போது அரசியல்வாதிகளாகத் தங்களை அடையாளப்படுத்தியிருப்பவர்களில் பெரும்பான்மையினர் தங்களின் அரசியல் அணுகுமுறைகளில் படுமோசமான தோல்வியின் சாட்சியாக இருப்பவர்கள். இவர்களது ஆற்றலின்மை தான் இந்த அரசியலை இந்தளவுக்குச் சீரழித்தது. இவ்வாறானவர்கள் தொடர்ந்தும் அரசியலை தீர்மானிக்கும் போது எந்தவொரு முன்னேற்றகரமான விடயமும் இடம் பெற வாய்ப்பில்லை.

இதனை முதலில் தமிழ் மக்கள் உணர வேண்டும். அவ்வாறில்லாது போனால் புதியதோர் அரசியல் கலாசாரம் ஈழத் தமிழ்ச் சூழலில் மலராது. தமிழ் மக்கள் மத்தியில் புதியவர்களைத் தேடுவது மட்டுமல்ல முன்னேற்றகரமான காலத்துக்குப் பொருத்தமான அரசியல் சிந்தனையை முன் வைக்கக் கூடியவர்களை நோக்கி தமிழ் மக்கள் திரும்ப வேண்டும். அப்போது தான் இருக்கின்ற நிலைமையில் ஓரளவாவது மாற்றங்கள் ஏற்படக்கூடும்.

# ரணிலுக்கும் மணைவிக்கும் சீனத்தூதுவர் வீட்டில் விருந்து

கொழும்பில் உள்ள சீனத் தூதுவரின் இல்லத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சீனத் தூதுவர் 23 மார்ச் 2025 ஞாயிறு இரவு இராப்போசனம் வழங்கியுள்ளார். மறுநாள் திங்கட்கிழமை ரணில் விக்கிரமசிங்கவின் பிறந்த நாளை முன்னிட்டு இராப்போசனம் வழங்கப்பட்டுள்ளது. இதன்போது ரணில் விக்கிரமசிங்கவின் பாரியார் மைத்திரி விக்கிரமசிங்கவும் பங்கேற்றார்.

இதேவேளை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் 5ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக ஜனாதிபதி அநுர பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் போது இதனைக் குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பில் உருவான "கிழக்கு தமிழர் கூட்டமைப்பில்" கருணா பிள்ளையான் வியாழேந்திரனுடன் இணைவு!



மட்டக்களப்பில் உருவாக்கப்பட்ட கிழக்கு தமிழர் கூட்டமைப்பு புதிய கூட்டமைப்பில் கருணா அம்மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் வி.முரளீதரன் மற்றும் பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் ஆகியோர் இணைந்து கொண்டதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 22 மார்ச் 2025 சனிக்கிழமை மட்டக்களப்பு றிவோரா ஹோட்டலில் கைச்சாத்திட்டனர்.

பாராளுமன்ற தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவை தொடர்ந்து உள்ளூராட்சி தேர்தலில் களமிறங்குவதற்காக புதிய முயற்சியொன்றை பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மேற்கொண்டு 'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' எனும் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு அதில் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகத்தினருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கடந்த 15 ம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

இதனையடுத்து எதிர்வரும் மே மாதம் இடம் பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் படகு சின்னத்தில் இணைந்து களமிறங்கியுள்ளனர்.

இந்தநிலையில், கிழக்கு தமிழர் கூட்டமைப்புடன் கருணா தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று கைச்சாத்தானதையடுத்து, பிரிந்திருந்த கருணா – பிள்ளையான் ஆகியோர் மீண்டும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

போலித்தேசியவாதிகள் எமது மக்களை தவறாக வழி நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றுவது தான் எமது பிரதான இலக்காகும் என்று கருணா அம்மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

நாங்கள் ஆயுத ரீதியான போராட்டத்திலிருந்து எதற்காக ஜனநாக வழிக்கு திரும்பினோமோ அந்தஇலக்கை அடைவதற்காவே மீண்டும் இணைந்திருக்கின்றோம். வடக்கு மாகாண மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிராகரித்து விட்டார்கள்.

அவர்களை எதிரிகளாகவே பார்க்கின்றார்கள். அவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தில் போலித்தேசியவாகளுக்கு இடமளிக்க முடியாது. அவர்களை அகற்ற வேண்டும். அவர்களின் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

அந்த வகையில் கிழக்கு மாகாண மக்கள் பல விடயங்களில் தெளிவுற வேண்டியுள்ளது. அதற்காக எமது பயணமானது முடிவற்றதாக தொடர்ச்சியானதாக இருக்கும் நாம் வரலாற்றை படைத்தவர்கள். நாம் வரலாற்றை மாற்றியமைத்தவர்கள். ஆகவே எம் முன்னிலையில் வந்து நின்று தேசியம் பேசுவதற்கு எவருக்கும் அருகதையில்லை என்றார்.

## சிறையில்இருக்கும் தென்னக்கோனுக்கு வீட்டுச் சாப்பாடு தேவையாம்!



முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், தடுப்புக்காவலில் உள்ள காலத்தில் வீட்டிலிருந்து உணவு பெறுமாறு விடுத்த கோரிக்கையை மறு பரிசீலனை செய்வதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகள் ஆணையர் காமினி பி. திசாநாயக்க, தென்னகோன் தனது இல்லத்திலிருந்து உணவு கொண்டு வருவதற்கு முறையாக அனுமதி கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அவரது கோரிக்கையை ஆதரிப்பதற்கான சரியான காரணங்களை வழங்குமாறு திணைக்களம் அவருக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதற்கான தகுந்த காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டவுடன் சிறை அதிகாரிகள் அவருக்கு வீட்டில் இருந்து உணவைப் பெற அனுமதிப்பதற்கான தகுந்த நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று திசாநாயக்க மேலும் கூறியுள்ளார்.






வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Give you solutions without bankruptcy.

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation



Over 20 Years Experience in the field of Insolvency

CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# நாடு அனுராவோடு! ஊர் எங்களோடு! கட்சி யாரோடு?

சில கிழமைகளுக்கு முன்பு தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவிகே சிவஞானம் நடத்திய ஒரு ஊடகச் சந்திப்பில் ஒரு வசனத்தைச் சொன்னார். நாங்கள் மட்டும் தோற்கவில்லை. இதை அவர் எத்தகைய அர்த்தத்தில் சொன்னார்? இது எல்லாருக்குமான தோல்வி என்ற அர்த்தத்தில் சொன்னாரா? அல்லது எல்லாருமே தோற்றிருக்கிறார்கள். எனவே இதில் எங்களை மட்டும் ஏன் கேட்கிறீர்கள்? என்ற அர்த்தத்தில் சொன்னாரா?

எல்லாருக்குமே தோல்வி ஏற்பட்டிருக்கிறது என்பதை அதன் சரியான வார்த்தைகளில் சொன்னால் தமிழ்த் தேசியத் தரப்பைச் சேர்ந்த கட்சிகள் எல்லாவற்றுக்குமே பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது என்று பொருள்.அந்த பின்னடைவுக்கு யார் பொறுப்பு? ஒரு மூத்த கட்சியாக. உள்ளதில் பெரிய கட்சியாக தமிழரசுக்கட்சி எடுத்த முடிவுகள் அதற்குக் காரணம் இல்லையா? இந்தத் தோல்வியானது கடந்த 15 ஆண்டுகளாக ஏற்பட்டு வரும் தொடர்ச்சியான தோல்விகளில் ஆகப் பிந்தியது என்பதனை சிவிகே சிவஞானமும் தமிழரசுக் கட்சியும் ஏற்றுக் கொள்ளுமா? இந்தத் தொடர் தோல்விகளுக்கு காரணம் என்ன?

காரணம் மிகவும் எளிமையானது. தமிழரசுக் கட்சி தன்னை எல்லாக் கட்சிகளையும் விட உயர்வானது. பெரியது. தலைமைப் பொறுப்பில் இருப்பது என்றெல்லாம் கூறிக் கொள்கின்றது. ஆனால் அந்தக் கட்சி அந்தப் பொறுப்பை உணர்ந்து நடக்கவில்லை. கடந்த 15 ஆண்டுகளாக சம்பந்தர் அந்தக் கட்சியை கொழும்பை நோக்கிச் சாய்த்து செல்ல முற்பட்டார். அதன் விளைவாக கட்சிக்குள் இரண்டு நிலைப்பாடுகள் பலமாக மேலெழுந்து விட்டன.

ஒரு நிலைப்பாடு கொழும்பை நோக்கிச் சாய்வது. இன்னொரு நிலைப்பாடு. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மையாக இருப்பது. சம்பந்தர் நினைத்தது போல கட்சியை செங்குத்தாகக் கொழும்பை நோக்கித் திருப்ப முடியவில்லை. அதன் விளைவாக மேற்சொன்ன இரண்டு போக்குகளும் ஒன்று மற்றதற்கு எதிரானதாக மேல் எழுந்து விட்டன. அதன் விளைவாகக் கட்சி இரண்டாகப் பிளந்து கிடக்கின்றது. கட்சி இப்பொழுதும் நீதிமன்றத்தில் தான் நிற்கின்றது. கட்சித் தேர்தலில் நிராகரிக்கப்பட்டவரும் நாடாளுமன்றத் தேர்தலில் நிராகரிக்கப்பட்டவருமாகிய சுமந்திரன் கட்சிக்குள் புத்திசாலித்தனமாக உள்நுழைந்து கட்சியைப் படிப்படியாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்.

கடந்த ஆண்டின் தொடக்கத்தில் கட்சிக்குள் நடந்த தேர்தலில் கட்சி உறுப்பினர்களால் தோற்கடிக்கப்பட்டவர். கடந்த ஆண்டின் இறுதியில் நாடு முழுவதும் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களால் தோற்கடிக்கப்பட்டவர். அப்படிப்பட்ட ஒருவர் கட்சிக்குள் ஒரு பிரதானியாகத் தன்னைப் பலப்படுத்தி வருகிறார். தேர்தலில் தோற்ற ஒருவர் கட்சிக்குள் இவ்வளவு முக்கியத்துவத்தை பெறுவதை எப்படிப் பார்ப்பது?

தேர்தலில் வெற்றி பெறுவதை ஒரு பிரதான தகுதியாகக் கருதிய சம்பந்தர் அதைச் சொல்லித்தான் ஏனைய கட்சிகளை மட்டம் தட்டுவார். சம்பந்தரின் வார்த்தைகளில் சொன்னால் தேர்தலில் வெல்லாத ஒருவர் கட்சிக்குள் தன்னுடைய பிடியைப் பலப்படுத்தி வருகிறார். இதை எப்படிப் பார்ப்பது?

கட்சியைப் பலப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு அவர் முன்னெடுக்கும் எல்லா நடவடிக்கைகளிலும் மற்றொரு உள் நோக்கமும் இருக்கும். சிறீதரனை எப்படி கிளிநொச்சிக்குள் முடக்குவது? என்பதே அந்த உள்நோக்கம். சிறீதரனையும் அவருடைய அணியையும் முடக்குவதற்கு அவர் பயன்படுத்தும் பிரதான ஆயுதங்களில் ஒன்று பொது வேட்பாளரை ஆதரித்தமை.

பொது வேட்பாளர் என்ற கருத்துருவமே தமிழ் அரசியலில் புதுமையானது. அது கடந்த 15 ஆண்டு கால ரியாக்ரிவ் – பதில் வினையாற்றும் அரசியலில் இருந்து தமிழ் அரசியலை ப்ரோ ஆக்டிவாக — செயல்முனைப்பு உள்ளதாக மற்றும் நோக்கத்தைக் கொண்டது.அது கட்சி கடந்து ஒரு திரட்சியை ஏற்படுத்த முயற்சித்தது. கிழக்கிலிருந்து வந்த ஒரு வேட்பாளருக்கு வடக்கில் மட்டும் ஒன்றரை லட்சத்துக்கு மேலான வாக்குகள் கிடைத்தன. அது ஒரு சாதாரண தொகை அல்ல. தமிழ்த் தேசிய வரலாற்றில் ஒரு தனி அரசியல்வாதிக்கு இதுவரை கிடைத்த வாக்குகளில் அதிகமான தொகை வாக்குகள் அவை.

அந்த வாக்குகளைத் திரட்டும் குறியீடாக தேர்தலில் நின்றவர் அரியனேத்திரன். அவர் தமிழரசு கட்சியின் உறுப்பினர். நமது கட்சி உறுப்பினர் ஒருவருக்கு அவ்வாறு அதிக தொகை வாக்குகள் கிடைத்ததை. தமது கட்சி உறுப்பினர் ஒருவர் தாயக ஒருமைப் பாட்டுக்காக வாக்குகளை திரட்டும் ஒரு குறியீடாக தேர்தலில் நின்றமையை. தமது கட்சி உறுப்பினர் ஒருவர் தமிழ் அரசியலை செயலூக்கம் மிக்கதாக மாற்றும் உயர்வான நோக்கத்தோடு ஒரு தேர்தலில் நின்றமையை. தமது கட்சி உறுப்பினர் ஒருவர் தேசத்தைத் திரட்டும் குறியீடாக ஒரு சந்நியாசி போல தேர்தலில் நின்றதை. தமிழரசுக் கட்சி எப்படிப் பார்க்கின்றது?

அதை ஒரு குற்றமாகக் கூறி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அவரை கட்சியிலிருந்து நீக்கியிருக்கிறது. அதாவது அவர் செய்த குற்றம் தேசத்தைத் திரட்டியது. தமிழரசுக் கட்சிக்கு தனது கட்சிக்காரரின் மகிமையே தெரியவில்லை. தேசத்தைத் திரட்டிய குற்றத்துக்காக அரியநேத்திரனை கட்சியை விட்டு நீக்கலாமென்றால் அதே குற்றத்துக்காக பொது வேட்பாளரை ஆதரித்த ஏனையவர்களிடம் விளக்கம் கேட்கலாமென்றால். தமிழரசு கட்சி எங்கே நிற்கின்றது? தேசத் திரட்சிக்கு எதிராகவா நிக்கிறது?

இப்பொழுது ரணில் விக்கிரமசிங்காவின் அல்ஜசீரா பேட்டி தொடர்பாக எல்லாரும் பேசிக் கொள்கிறார்கள். அந்தப் போட்டியில் தமிழ் மக்களுக்கு கிடைத்திருக்கும் பிரதான செய்தி. ரணில் இறந்த காலத்துக்குப் பொறுப்புக் கூற மாட்டார் என்பது தான். ரணில் விக்கிரமசிங்கம் மட்டுமல்ல. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெற்ற சஜித் பிரேமதாசவும் பொறுப்புக் கூறத் தயாரில்லை.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஐநா கூட்டத் தொடர் நடந்து கொண்டு இருந்தது. அப்பொழுது தமிழ் வாக்குகளில் தங்கியிருந்த சஜித் என்ன சொன்னார்? பன்னாட்டுப் பொறிமுறைக்கு எதிராகத் தான் கருத்து தெரிவித்திருந்தார். எனவே ரணில் விக்கிரமசிங்க மட்டுமல்ல. மகிந்த மட்டுமல்ல. அனுர மட்டுமல்ல. சஜித்தும் தமிழ் மக்களுக்குப் பொறுப்புக் கூறத் தயார் இல்லை. ஆனால் சுமந்திரன் அவருக்கு ஆதரவாக பகிரங்கமாக மேடையில் தோன்றினார்.

பொது வேட்பாளருக்காக விழும் வாக்குகள் வீணாகப் போன வாக்குகள் என்று கூறினார். பொது வேட்பாளருக்கு ஆதரவாக நின்றவர்களுக்கு எதிராக பகிரங்கமாக பிரகடனங்களை வெளியிட்டார். பொது வேட்பாளரை ஆதரித்த தனது கட்சிக்காரர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு தனக்கு விசுவாசமான கட்சியின் மத்திய குழுவைத் தூண்டி வருகிறார். அப்படி என்றால் சுமந்திரன் எங்கே இருக்கிறார்? தேசத் திரட்சிக்கு ஆதரவாகவா? தேசத் திரட்சிக்கு எதிராகவா? பொறுப்புக் கூறலுக்கு ஆதரவாகவா? பொறுப்புக் கூறலுக்கு எதிராகவா? தேசத் திரட்சியை அவர் எப்படி விளங்கி வைத்திருக்கிறார்?

கட்சியை ஒரு கட்டுக்கோப்பான இறுக்கமான ஸ்தாபனமாகத் திரட்ட முடியாத ஒருவர் எப்படித் தேசத்தைத் திரட்ட முடியுமா? தானே ஒரு திரண்ட கட்டமைப்பாக இல்லாத கட்சி தேசத்தைத் திரட்டும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்?

பொது வேட்பாளரின் விடயத்தில் தேசத் திரட்சிக்கு எதிராக நின்றவர்.கட்சிக்குள் தனது பிடியை படிப்படியாகப் பலப் படுத்தி வருகிறார். தேசத் திரட்சிக்கான குறியீடாக நின்ற அரியநேத்திரனை கட்சியிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். அரியநேத்திரனுக்கு எதிராகத் தமிழரசுக் கட்சி எடுத்த நடவடிக்கை என்பது அக்கட்சியின் மத்திய குழு எடுத்த முடிவுகளிலேயே பாரதூரமான ஒரு வரலாற்றுத் தவறு. தேசத் திரட்சியின் குறியீடாக நின்ற தன் கட்சிக்காரரின் மகிமை தமிழரசுக் கட்சிக்கே தெரியவில்லை. கட்சி அரசியலானது தேசிய உணர்வை மழுங்கடித்து விட்டதா?

தமிழ்த் தேசிய வரலாற்றில் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலான காலப்பகுதியில் ஒரு தனித்தமிழ் வேட்பாளர் பெற்ற ஆகக் கூடிய வாக்குகளை அரிய நேத்திரன் பெற்றார். அந்த மகத்துவத்தை விளங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அவருடைய கட்சியின் மத்திய குழு அதன் தேசிய ஆன்மாவை இழந்து விட்டதா? கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 257.813. அரியநேத்திரனுக்கு ஜனாதிபதி தேர்தலில் கிடைத்த வாக்குகள் 2.25.000. அவை தேசத்தைத் திரட்டலாம் என்ற நம்பிக்கைக்கு கிடைத்த அடிப்படை வாக்குகள். அவை பொதுக் கட்டமைப்புக்கு மட்டும் சொந்தமான வாக்குகள் அல்ல என்பதை கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் நிரூபித்தார்கள். அவை கட்சி கடந்த தேசத் திரட்சிக்கு கிடைத்த வாக்குகள்.

ஆனால் அரியநேத்திரனின் மகத்துவத்தை அவருடைய சொந்தக் கட்சியே உணரத் தவறிவிட்டது மட்டுமல்ல அவரைக் கட்சிக்குள் இருந்து நீக்கிய தன் மூலம் கட்சியின் மத்திய குழு தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தும் செய்தி



என்ன? தேசத் திரட்சிக்கு எதிராக நிற்கிறோம் என்பதா?

தேசத் திரட்சிக்காக ஒரு சன்னியாசியைப் போல குறியீடாக நின்ற அரியம் கட்சிக்கு வெளியே. தேசத் திரட்சிக்கு எதிராகவும் பொறுப்புக் கூறலுக்கு எதிராகவும் தமிழ் வாக்குகளை சஜித்திற்குச் சாய்த்துக் கொடுத்தவரும் அதை ஆதரிப்பவர்களும் கூறுகிறார்கள் நாடு அனுரவோடு ஊர் எங்களோடு என்று. ஆனால் கட்சி யாரோடு?

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

21 மார்ச் 2025 –28 மார்ச் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## நினைவழியா நினைவுகள்



### திருமதி செல்வநாயகி சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் 21 மார்ச் 2025 வெள்ளிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் இணையரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நடராஜா சிதம்பரநாதன்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா சிதம்பரநாதன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 20 மார்ச் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நடராஜா சிதம்பரநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாக்கியம் மயில்வாகனம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களுடைய இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 24 மார்ச் 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களுடைய ஏழாவது ஆண்டு நினைவு நாள் 29 மார்ச் 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை பத்மநாதன்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை பத்மநாதன் அவர்களுடைய ஆறாவது ஆண்டு நினைவு நாள் 31 மார்ச் 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சின்னத்துரை பத்மநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 61வது ஆண்டுசிரார்த்த தினம்



திரு சுப்பிரமணியம் கந்தையா

திருமதி பார்வதி கந்தையா

அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது 61வது ஆண்டு சிரார்த்த தினம் 27 மார்ச் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




22 மார்ச் 2025 சனிக்கிழமை கனடாவில் வாழும் திரு திருமதி பிரபாகரன் பவானி தம்பதிகளின் 16வது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் தமது குடும்ப உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




22 மார்ச் 2025 சனிக்கிழமை கனடாவில் வாழும் திரு திருமதி பிரபாகரன் பவானி தம்பதிகளின் 16வது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் தமது குடும்ப உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




22 மார்ச் 2025 சனிக்கிழமை கனடாவில் வாழும் திரு திருமதி பிரபாகரன் பவானி தம்பதிகளின் 16வது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் தமது குடும்ப உறவுகளுடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




18 மார்ச் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வாழும் திரு திருமதி புஸ்பராஜ் சியாமளா தம்பதிகளின் 25வது திருமண இணைவு நன்நாளாகும். அன்றைய நாளுக்காக 22 மார்ச் 2025 சனிக்கிழமை இணையர்கள் தமது குடும்ப உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




22 மார்ச் 2025 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நிர்மலகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெனனியின் 6வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஜெனனி தனது பெற்றோர்கள் சகோதரத்துடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வாழும் திரு திருமதி கஜன் கௌசிகா தம்பதிகளின் 6வது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் தமது குடும்ப உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்




24 மார்ச் 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி மங்களமூர்த்தி செல்வமலர் தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெகரின்யா மங்களமூர்த்தியின் பிறந்த நன்நாளாகும். அன்றைய செல்வி ஜெகரின்யா தனது பெற்றோர்கள் சகோதரத்துடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




24 மார்ச் 2025 திங்கட்கிழமை குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் மாங்கொல்லை காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களது 2வது ஆண்டுநினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 39வது திருமண நன்நாள் வாழ்த்து



### திரு திருமதி மனோகரன் ரதிதேவி இணையர்கள் - கனடா

கனடாவில் வசிக்கும் திரு திருமதி மனோகரன் ரதிதேவி இணையர்களது 39வது ஆண்டு திருமண இணைவு நன்நாள் 26 மார்ச் 2025 புதன் கிழமையாகும். அன்றைய தினம் திரு திருமதி மனோகரன் ரதிதேவி இணையர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். இருமனம் ஒன்றித்து ஒரு மனமாகி 39வது ஆண்டு காணும் இணையர்களை பாரதி இல்லக் குழந்தைகளுக்கும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்க வளமுடனும் நலமுடனும் என வாழ்த்துகின்றார்கள்.






25 மார்ச் 2025 செவ்வாய்க்கிழமை நோர்வேயில் வசிக்கும் திரு திருமதி சிவகுமார் பகீரதி தம்பதிகளின் செல்வப்புதல்வி நிருசா சிவகுமாரின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி நிருசா சிவகுமார் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்





26 மார்ச் 2025 புதன்கிழமை கனடாவில் வாழும் திரு திருமதி மனோகரன் ரதிதேவி தம்பதிகளின் 39வது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் தமது குடும்ப உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




27 மார்ச் 2025 வியாழக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு கந்தையா சுப்பிரமணியம் அவர்களது 61வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




27 மார்ச் 2025 வியாழக்கிழமை சங்கரவத்தை வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சிவதர்சன் ஆரணி தம்பதிகளின் செல்வப்புதல்வி அய்ஸ்னா சிவதர்சனின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி அய்ஸ்னா தனது பெற்றோர்கள் மற்றும் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்


APRIL
18&19
2025
TICKETS
$30 $50 VIP($100)
416-566-0790
RAMU
Playback Singer
TMS SELVAKUMAR
AKSHAYA SHIVKUMAR
Zee Tamil Singer
OLD IS GOLD
KARIS
EVENT PLACE
55 Nugget Ave unit 10,
Scarborough, ON M1S 4L4
AAROSAI
APRIL 18
NATCHATHRAA
MUSIC GROUP
APRIL 19



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா




SUNDAY
JUNE 01
2025

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
ஈழநாடு
பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com



# ஐ.நா.வின் செப்டம்பர் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக புதிய பிரேரணை சுமந்திரனிடம் பிரிட்டன் பிரதிநிதி தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள 59ஆவது கூட்டத் தொடரில் இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தலை மையப்படுத்திய புதிய பிரேரணையொன்று பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் கொண்டு வரப்படவுள்ளதாக பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தோ-பசிபிக் பிராந்திய பணிப்பாளர் பென் மெல்லர் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளரும், ஊடகப் பேச்சாளருமான ஜனாதிபதி எம்.ஏ.சுமந்திரனிடத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர் வடக்கு,கிழக்கில் உள்ள நிலைமைகள் மற்றும் புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தியிருந்ததோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கீழ் செயற்படும் சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறையின் கால நீடிப்பு தொடர்பிலும் பரஸ்பர கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தோ-பசிபிக் பிராந்திய பணிப்பாளர் பென் மெல்லருக்கும், எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் நடைபெற்றிருந்தது. இதன் போது முதலில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் போரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பிலான தீர்மானத்தை பிரதான அனுசரணையாளர் என்ற வகையில் பிரித்தானியா தலைமை தாங்கிக் கொண்டு வரவுள்ள விடயத்தினை பென் மெல்லர் பகிர்ந்துள்ளார்.

அத்துடன் குறித்த பிரேரணைக்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் அதிகமான கவனம் செலுத்தப்பட்டுள்ள போதும் அதற்கான சதகமான நிலைமைகள் குறைந்தே காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கையில் 'நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தலை' நடைமுறைச்சாத்தியமாக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் புதிய பிரேரணையை கொண்டு வருவதில் பிரித்தானியா கொண்டிருக்கின்ற அர்ப்பணிப்பை வரவேற்ற சுமுந்திரன் அதற்கான அவசியத்தையும், சர்வதேச தளத்தில் வைத்திருக்க வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டையும் பகிர்ந்து கொண்டார்.

விடேசமாக தற்போதைய அரசாங்கம் கடந்தகால தவறுகளை சரிசெய்து முறைமை மாற்றத்தினையே மையப்படுத்தி ஆட்சியில் அமர்ந்தது. இவ்வாறான நிலையில் அந்த அரசாத்தினாலேயே அதற்கான இலக்குகளை முன்னகர்த்த முடியும் என்றும் குறிப்பிட்டார்.

அதனையடுத்து, மெல்லர் வடக்கு கிழக்கு மக்களின் நிலைமைகள் தொடர்பில் கேட்டதோடு, அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் சுமந்திரனிடத்தில் வினவியிருந்தார்.

இதற்குப் பதிலளித்திருந்த சுமந்திரன், வடக்கு,கிழக்கு மக்கள் தமது அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையிலான புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதோடு அதிகாரங்கள் பகிரப்பட்ட சமஷ்டி அடிப்படையிலான நிரந்திரமான தீர்வொன்று இனப்பிரச்சிக்காக முன்வைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். அதற்காகவே அவர்கள் தொடர்ச்சியாக ஆணை வழங்கி வருகின்றார்கள் என்று குறிப்பிட்டார்.

அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில் வடக்கு கிழக்கு மக்களுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக மாற்றங்களை எதிர்பார்த்த மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை அளித்திருந்த போதும் அவற்றை இன்னமும் பூர்த்தி செய்யாத நிலைமை தான் நீடிக்கின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் செய்யப்பட வேண்டும் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் ஒட்டுமொத்த நிலைப்பாடாக இருக்கின்ற நிலையில், சாட்சியங்களை திரட்டும் பொறிமுறையின் கால எல்லையையும் நீடிக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பாகவுள்ளதாகவும் கூறியுள்ளார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# கதாநாயகர்கள் - கதாநாயகிகள் இல்லாத தமிழ்த்தேசிய அரசியல்?




கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்திய மக்கள் அமைப்புக்கு புலம் பெயர்ந்த தமிழர் ஒருவர் ஒரு பல்கலைக்கழக மாணவரை அறிமுகப்படுத்தினார். அவர் பொது வேட்பாளருக்கான அணியுடன் இணைந்து இயங்குவார் என்றும் சொன்னார்.அந்த மாணவர் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்குத் துடிப்பாகச் செயல்படவில்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கிறார்கள். எனினும் அவர் பொது வேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாட்டோடு காணப்பட்டார்.

இது பழைய கதை. அண்மையில் ஒரு வாட்ஸ் அப் குழுவில் மேற்படி மாணவர் ஒரு காணொளியைப் பகிர்ந்திருந்தார். அனுரவை ஒரு கதாநாயகராகக் கட்டமைக்கும் விதத்தில் கவர்ச்சியாகத் தயாரிக்கப்பட்ட ஒரு காணொளி அது. அவர் ஏன் அதைப் பகிர்ந்திருக்கிறார் என்பதனை அறிவதற்கு பல்கலைக்கழகத்தில் அவருக்கு கற்பித்த ஓர் ஆசிரியரிடம் கேட்டேன்.

அவர் சொன்னார், அந்த மாணவர் இப்பொழுது தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர்களில் ஒருவர் போலத் தோன்றுகிறார் என்று. ஜனாதிபதித் தேர்தலில் அவர் பொது வேட்பாளரின் பக்கம் வந்தாரே என்று கேட்டேன். அது அப்பொழுது இப்பொழுது அவர் தேசிய மக்கள் சக்திக்கு வந்து விட்டார். படிக்கும் காலங்களில் அவர் தீவிரமான தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை எடுத்து சக மாணவர்களோடு தர்க்கப்படுவார். ஆனால் படித்து முடிந்ததும் அவர் இப்பொழுது தேசிய மக்கள் சக்தியின் பக்கம் நிற்கிறார் என்றும் அந்த ஆசிரியர் கூறினார்.

அந்த மாணவர் பகிர்ந்த காணொளியானது அனுரவை தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கதாநாயகராகக் கட்டமைக்கும் நோக்கத்தோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பிருந்தே அது போன்ற சிறிய காணொளித் துண்டுகள் பல வெளிவந்திருக்கின்றன. தேசிய மக்கள் சக்தியின் டிஜிட்டல் ப்ரோமோஷனக்கான அணி வினைத்திறனோடும் படைப்புத் திறனோடும் செயல்படுகின்றது. அனுரவை ஒரு கதாநாயக பிம்பமாகக் கட்டியெழுப்பும் நோக்கத்தோடு திட்டமிட்டு அவ்வாறான காணொளிகளை உருவாக்கி வருகிறது. அவற்றில் காணப்படும் தொழில்சார் திறன், கலை நயம் போன்றன அனுரவைச் சுற்றி ஓர் ஒளி வட்டத்தைக் கட்டமைக்கும் நோக்கமுடையவை.

ஒரு கதாநாயகராகக் கட்டியெழுப்பத் தேவையான முகம், உடல்வாகு, உடல்மொழி போன்றன அனுரவுக்கு உண்டு. அவற்றையும் சேர்த்து மாற்றத்தின் அலை ஒன்றுக்குத் தலைமை தாங்கும் கதாநாயக பிம்பமாக அவரைக் கட்டமைத்திருக்கிறார்கள்.

இந்த இடத்தில் தமிழ் நோக்கு நிலையில் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கலாம். அனுரவைப் போல ஒரு கதாநாயகராகக் கட்டமைக்கத்தக்க அம்சங்களைக் கொண்ட தமிழ் தலைவர்கள், தலைவிகள் யாருமே இப்பொழுது களத்தில் இல்லையா? அல்லது அவ்வாறு கதாநாயக பிம்பங்களைக் கட்டியெழுப்ப முடியாத ஒரு சமூக உளவியல் அரசியற் சூழல் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்றதா?

இந்தக் கேள்விகளுக்கான விடைகளுக்குள் இருக்கிறது தமிழரசியலின் சீரழிவும் சாபக்கேடும்.

கடந்த 15ஆண்டுகளாக ஈழத்தமிழ் கூட்டு உளவியலானது கொந்தளிப்பானதாகவே காணப்படுகின்றது. கடந்த 15ஆண்டு கால தலைமைத்துவ வெற்றிடத்தில் தன்னைத் தானே தின்னும் ஒரு சமூகமாக் தானே தன்னை நம்பாத் ஒருவர் மற்றவரை சிறுமைப்படுத்துகின்ற தன் பலம் எதுவென்று தெரியாமல் தூர்ந்து போகும் ஒரு சமூகமாக ஈழத் தமிழ்ச் சமூகம் மாறி வருகின்றதா?

உளவியலில் Pistanthrophobia – பிஸ்டாந்ரோ ஃபோபியா என்ற ஓர் ஆங்கிலப் பதம் உண்டு. அதன் பொருள், யாரையும் நம்புவதற்கு பயம். இறந்த காலத்தில் ஏற்பட்ட எதிர்மறையான, கசப்பான அனுபவங்களின் விளைவாக மற்றவர்களை நம்பத் தயாரற்ற எரிச்சலுடன் கூடிய பயம். (An irritating fear of trusting others typically resulting from previous negative experiences) போருக்குப் பின்னரான கூட்டு மனவடுக்களின் போதும் இது போன்ற உளவியல் விளைவுகளைக் காண முடியும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

இவ்வாறு கூட்டுக் காயங்கள் கூட்டு மனவடுக்களுக்குள் அழுத்திக் கிடக்கும் ஒரு சமூகத்தின் கொந்தளிப்பான கூட்டு உளவியலுக்குத் தலைமை தாங்கும் அரசியலானது ஒரு விதத்தில் கூட்டுச் சிகிச்சையாக அமைய வேண்டும். அதை ஒருவிதத்தில் குணமாக்கல் செயற்பாடு என்று கூடச் செல்லலாம். அவ்வாறு இறந்த காலத்தின் கூட்டுக் காயங்களுக்கும் கூட்டு மனவடுக்களுக்கும் கூட்டுச் சிகிச்சையாக அமையவல்ல ஒரு அரசியலுக்குத் தலைமை தாங்கும் சக்தி மிக்க தலைவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் இல்லையா? அல்லது இருப்பவர்களை மேலெழ விடாமல் ஒருவர் மற்றவரைக் கடித்துத் தின்னும் அல்லது ஒருவர் மற்றவரை சிறுமைப்படுத்தும் அல்லது மேலெழ முயற்சிப்பவரின் காலைப் பிடித்து இழுத்து விழுத்துகின்ற ஒரு சமூகமாக தமிழ்ச் சமூகம் மாறி வருகின்றதா? அதனால் தான் தமிழ் அரசியலில் கதாநாயக பிம்பங்களைக் கட்டமைக்க முடியவில்லையா?

அரசியலில் கதாநாயக பிம்பங்களை கட்டமைப்பது என்பது தனி மனித துதிக்கும் தலைமை வழிபாட்டுக்கும் வழி வகுக்கும் என்ற விமர்சனங்களை இக்கட்டுரை ஏற்றுக் கொள்கிறது. ஆனால் வாக்கு வேட்டை அரசியலில் ஜனவசியம் மிக்க பிம்பங்களுக்கு முக்கியத்துவம் உண்டு. அதுவும் டிஜிட்டல் ப்ரோமோஷனின் காலத்தில் அந்த முக்கியத்துவம் பல மடங்கு அதிகம். அதை விட முக்கியமாக,சுமார் 15 ஆண்டுகளாக தலைமைத்துவ வெற்றிடத்துள் அழுந்திக் கிடக்கும் ஒரு சமூகத்தை அதன் அடுத்த கட்ட அரசியலுக்கு பண்புரு மாற்றம் செய்வதற்கு அவ்வாறான தலைமைகள் அவசியம். ஆனால் அப்படிப்பட்ட தலைமைகள் மேலெழ முடியாத அளவுக்கு தமிழ்த் தேசிய அரசியலின் கூட்டு உளவியலானது சிதைந்து போய்க் கிடக்கின்றது.

ஐக்கியத்துக்காக உழைப்பவர்களை இந்தியாவின் ஏஜென்ட்கள் என்று கூறும் அளவுக்கு பிஸ்டாந்ரோ போபியா ஒரு சமூக அரசியல் நோயாக மாறி விட்டது. ஐக்கியப்படுமாறு கேட்பவர்களை எதிரியின் ஆட்கள் என்று முத்திரை குத்தும் நோய் ஈழத் தமிழர்கள் மத்தியில் மட்டும் தான் உண்டா?

தமிழ்த் தேசிய அரசியலில் வெறுப்பர்களை அதிகம் உற்பத்தி செய்த ஒரு கட்சியாகிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது கடந்த தேர்தலில் ஏற்பட்ட தோல்விகளின் பின் ஞானம் பெற்று கொள்கை வழி ஐக்கிய முயற்சிகளில் இறங்கியிருப்பதை ஒரு திருப்பகரமான மாற்றம் என்றே வர்ணிக்க வேண்டும்.

ஆனால் கொள்கை எது? ஒரு மக்களை அவர்கள் மத்தியில் இருக்கக்கூடிய பலம், பலவீனங்களோடு ஒரு திரளாகக் கூட்டிக் கட்டுவது தான் தேசியவாத அரசியல். ஒரு தேசம் என்பது புனிதர்களுக்கு மட்டுமல்ல. ஒரு தேசத்துக்குள் தியாகிகள் மட்டும் இருப்பதில்லை. நல்லவர்கள் கெட்டவர்கள் புனிதர்கள் கபடர்கள், நபுஞ்சகர்கள்,மனம் திருந்தியவர்கள் மனம் திருந்தாதவர்கள் விலை போனவர்கள் ஒத்தோடிகள், எதிர்த்தோடிகள் மறுத்தோடிகள் என்று எல்லா ஓட்டங்களும் ஒரு சமூகத்துக்குள் இருக்கும். அந்த எல்லா ஓட்டங்களையும் ஒரு பொது எதிரிக்கு எதிரான பேரோட்டமாக மாற்றுவதுதான் தமிழ்த் தேசிய அரசியல் கடந்த 15 ஆண்டுகளாக அதைச் செய்யத் தமிழ் தேசியக் கட்சிகளால் முடியவில்லை. அவர்களால் தமது கட்சிகளையும் கட்டியெழுப்ப முடியவில்லை மக்களையும் கட்டியெழுப்ப முடியவில்லை.

தங்களைக் கதாநாயகர்களாக அல்லது தியாகிகளாகக் கட்டமைப்பதற்காக தமது அரசியல் எதிரிகளை வில்லன்களாகச் சித்திரிக்கும் ஓர் அரசியல் பாரம்பரியமானது முடிவில் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளில் அநேகம் பேரை சொந்த மக்களே நம்ப முடியாத வில்லன்களாக பார்க்கும் ஒரு பரிதாபகரமான இடத்தில் வந்து நிற்கின்றதா?

உள்ளதில் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சி தலைமைப் போட்டிக்குள் சிக்கி ஏறக்குறைய தூர்ந்து போய் விட்டது. அந்தக் கெட்ட முன்னுதாரணமானது தமிழரசியலின் குறிகாட்டியும் கூட. சுமந்திரன் சிறீதரன் சாணக்கியன் போன்றவர்கள் தங்களுக்கென்று டிஜிட்டல் ப்ரோமோஷன் அணிகளை வைத்திருக்கிறார்கள். அவை அவர்களை கதாநாயகர்களாகக் கட்டமைக்கின்றன. ஆனால் கட்சியை நீதிமன்றத்திற்கு வெளியே கொண்டு வர முடியாத தலைவர்களை தமிழ் மக்கள் கதாநாயகர்களாகக் கருத மாட்டார்கள். சில சமயம் வில்லன்கள் ஆகத்தான் பார்ப்பார்கள்.

விக்னேஸ்வரன் அரசியலுக்கு வந்த புதிதில் ஜனவசியம் மிக்க ஒரு தலைவராகத் தோன்றினார். தமிழ் மக்கள் பேரவையின் எழுச்சியோடு அவருக்கு இருந்த ஜனக் கவர்ச்சி மேலும் அதிகரித்தது. ஆனால் அவரே அதனைப் போட்டு உடைத்தார். இப்பொழுது அவருடைய ஜனவசிய முகம் பரிதாபகரமான விதத்தில் சுக்குநூறாகி விட்டது. இது விக்னேஸ்வரனுக்கு மட்டுமல்ல கடந்த 15 ஆண்டுகளில் மேலெழுந்த பெரும்பாலான எல்லா தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் பொருந்தும். தமிழ்த் தேசிய அரசியலில் மேல் எழுகின்ற எந்த ஒரு தலைவருமே தன் ஜனவசியத்தை ஏன் தொடர்ந்து தக்க வைக்க முடியவில்லை?

ஏனென்றால் யாருமே தாங்கள் முன் வைத்த இலட்சியத்தை நோக்கி தமது கட்சியையும் கட்டியெழுப்ப முடியவில்லை. தமிழ் மக்களையும் கட்டியெழுப்ப முடியவில்லை. தன் பலம் எதுவென்று தெரியாமல், தானே தன்னில் நம்பிக்கை இழந்து, ஒருவர் மற்றவரை நம்பாத, ஒருவர் மற்றவரை சந்தேகிக்கின்ற ஒருவர் மற்றவரை வெறுக்கின்ற, ஒரு சமூகமானது தன்னை ஒரு தேசம் என்று அழைக்க முடியாது. தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ் மக்களையும் ஒரு தேசமாகக் கட்டியெழுப்பத் தவறுகின்றன தங்களையும் கட்சிகளாகக் கட்டியெழுப்பத் தவறுகின்றன.

தமிழ் மக்களுக்கு ஆறுதலாகவும் நம்பிக்கை ஒளியாகவும் முன்னுதாரணமாகவும் நிற்கக்கூடிய தலைவர்கள் எத்தனை பேர் உண்டு? அல்லது அப்படிப்பட்ட தலைவர்கள் மேலெழு முடியாத ஓர் அரசியல் சூழல் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்றதா? அதற்குக் கட்சிகள் பொறுப்பில்லையா?

இந்த சமூகப் பொருளாதார அரசியல் மற்றும் உளவியல் சூழல் தொடருமாக இருந்தால் அனுரவை நோக்கி ஆர்வத்தோடு பார்க்கின்ற் அவரை கதாநாயகராகக் கொண்டாடுகின்ற இளையவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். அது இனி வரக்கூடிய தேர்தல்களிலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும்

# சீனாவின் கடன் பொறி உண்மையா?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்





இலங்கைக்கு வழங்கிய கடனை மறு சீரமைப்பு செய்ததால் சீனாவின் எக்ஸிம் வங்கிக்கு 7 பில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டதாக சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். இலங்கைக்கு வழங்கிய கடனை மறுசீரமைப்பு செய்ததால் சீனாவுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையே அவர் வெளிப்படுத்த முயன்றிருக்கிறார்.

இதனைப் பற்றி யாரும் பெரிதாக பேசவதில்லை என்ற ஆதங்கத்தையும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். ஏனைய நாடுகள் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்வதற்கு தயங்கிக் கொண்டிருந்த போது முதலாவதாக சீனாவின் எக்ஸிம் வங்கியே கடன் மறுசீரமைப்புக்கு முன் வந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதுவரையில் இலங்கையுடன் இந்தியா கடன் மறுசீரமைப்பு உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அண்மையில் லண்டனுக்கு பயணம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் சத்தம் ஹவுஸில் சிந்தனை குழாமினரைச் சந்தித்து பேசும் போது இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவிகள் தொடர்பாக குறிப்பிட்டிருந்தார்.

பொருளாதார நெருக்கடியின் போது இலங்கைக்கு 4 பில்லியன் டொலர்களை இந்தியா வழங்கியது என்றும் அயல்நாடு என்ற வகையில் இந்தியா தனது பொறுப்பை நிறைவேற்றியது என்றும் கூறியிருந்த ஜெய்சங்கர் அதே போன்ற பொறுப்புணர்வு இந்தியாவின் அண்டை நாடுகளுக்கும் இருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

இலங்கைக்கு நாங்கள் செய்த உதவியைப் போல சரிசமமாக செய்ய வேண்டும் என்றில்லை. ஆனால் எங்களுக்கும் சில நலன்கள் இருக்கின்றன. அதனை இலங்கை புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அவரது இந்த கருத்து வெளியானதன் பின்னரே சீனத் தூதுவரின் ஊடகச் சந்திப்பு கொழும்பில் இடம் பெற்றிருந்தது. பொருளாதார நெருக்கடியின் போதுஇ இந்தியா நான்கு பில்லியன் டொலர்களை கடனாக கொடுத்திருந்தாலும் அதனை எப்படி திருப்பி பெற்றுக் கொள்ளப் போகிறது என திட்டவட்டமாக அறிவிக்கப்படவில்லை.

அதேவேளை அதற்கு சரிசமமான தொகையை அல்லது அதற்கு ஈடான ஒன்றை பெற்றுக்கொள்ளும் எண்ணம் இந்தியாவுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை. ஜெய்சங்கரின் கருத்து இந்தியாவின் நலன்களை புரிந்து கொண்டு இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே அமைந்திருந்தது.

ஆனால் சீன தூதுவரின் நிலைப்பாடு இலங்கைக்கு கடன் கொடுத்து அதனை மறுசீரமைப்பு செய்ததால் சீனாவுக்கு 7 பில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. இன்னும் கொஞ்சம் வெளிப்படையாக கூறுவதானால் இந்தியா கொடுத்த 4 பில்லியன் டொலர்களை விட எங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு அதிகம் என்று உரிமை கொண்டாடுகிறது சீனா. ஆனால் சீனத் தூதுவர் குறிப்பிட்டிருப்பது போல கடன் மறுசீரமைப்பினால் சீனாவுக்கு 7 பில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டது உண்மையா என்ற கேள்வி எழுகிறது.

ஏனென்றால் சீனாவின் எக்ஸிம் வங்கியிடம் பெற்றுக் கொண்ட கடன்கள் மற்றும் அதற்கான வட்டி என்பனவற்றை கணக்கிடும் போது கூட மொத்தத் தொகை ஏழு பில்லியன் டொலர்கள் எட்டவில்லை. அப்படியானால் 7 பில்லியன் டொலர்களை சீனா எப்படி இழந்தது என்ற கேள்வி வருகிறது.

சீனாவின் கடன் பொறியில் இலங்கை சிக்கியிருப்பதாக மேற்குலகமும் இந்தியாவும் தொடர் குற்றச்சாட்டுகளை முன் வைத்து வந்தன. அது சுத்தப் பொய் என சீனா மறுத்து வந்தது. ஆனால் சுமார் 4 பில்லியன் டொலர் கடன்களை கொடுத்து விட்டு கடன் மறுசீரமைப்புக்கு பின்னரும் அதனை விட சற்று அதிகளவு கடனை மீளப்பெற்றுக் கொள்வதற்கு ஒப்பந்தம் செய்திருக்கிறது சீனா. அப்படியிருக்க சீனாவுக்கு ஏழு பில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்றால் இலங்கையிடம் இருந்து சீனாவின் எக்ஸிம் வங்கி கடனுக்காக அறவிடும் வட்டி வீதம் எவ்வளவு என்ற கேள்வி வருகிறது.

கந்து வட்டி காரர்களைப் போல சீன வங்கி நடந்து கொண்டிருக்கிறதா என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது.

கடந்த ஜீன் மாதம் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட கடன் அறிக்கையில் சீனாவின் எக்ஸிம் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன்கள் மற்றும் கடந்த கால வட்டியை 4,187 மில்லியன் (4.187 பில்லியன்) டொலர் புதிய கடன்களாக மறுசீரமைத்துள்ளது. எனக் கூறப்பட்டிருந்தது. 2024 மார்ச் மாத நிலவரப்படி சீனாவின் எக்ஸிம் வங்கியிடம் பெறப்பட்டிருந்த கடன்கள் 3இ993 மில்லியன் டொலர்களாகும். அத்துடன் 903.8 மில்லியன் டொலர் திருப்பிச் செலுத்த வேண்டிய வட்டி நிலுவையையும் இருந்தது.

இந்த இரண்டையும் மறுசீரமைப்பு செய்து – 2024 ஆம் ஆண்டு ஜீன் மாதம் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட போது புதிய கடன்கள் 4இ187 மில்லியன் டொலர்கள் என வரையறுக்கப்பட்டது. இதில் செலுத்த வேண்டிய வட்டியின் ஒரு பகுதி மூலதனமாக மாற்றப்பட்டது.

இரு தரப்பு கடன்களுக்கான சராசரி வட்டி வீதம் 2.1 வீதமாக இருக்கிறது என்று அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். சீனாவும் கடன்பொறி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட போது இலங்கைக்கு தாங்கள் சராசரியாக குறைந்த வட்டிக்கே கடனை வழங்கி இருந்தோம் என திரும்பத் திரும்பக் கூறி வந்தது.

இப்படி இருக்கும் நிலையில் சீனாவின் எக்ஸிம் வங்கிக்கு கடன் மறுசீரமைப்பினால் வழங்கிய கடனை விட கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிக இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்றால் அது நம்பக்கூடிய விடயம் அல்ல.

2024 மார்ச் மாத நிலவரப்படி சீனாவின் எக்ஸிம் வங்கிக்கு கடன் மற்றும் வட்டியாக செலுத்த வேண்டிய மொத்த தொகை 4896.8 (3,993 + 903.8) மில்லியன் டொலர்கள் தான்.

கடன் மறுசீரமைப்பு செய்யப்பட்ட பிறகு ஜீன் மாதம் செலுத்த வேண்டிய மொத்த கடன் 4,187 மில்லியன் டொலர்கள் என மாற்றப்பட்டது. இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட வித்தியாசம் தான் கடன் மறுசீரமைப்பினால் சீனா இழந்த தொகையாகும். அது 709.8 மில்லியன் டொலர்கள் ஆகும். கடன் மறுசீரமைப்புக்கு பின்னரும் சீனாவின் எக்ஸிம் வங்கி இந்த கடனை மீளப்பெற்று முடிக்கும் வரை இழப்புக்களை எதிர் கொள்ளும் என்பது உண்மை. அந்தக் கடன் கையில் வந்து சேரும் வரை அதனை மூலதனமாக கருத முடியாது. 2028 ஆம் ஆண்டு தொடக்கம் தான் கடன்களை மீளச் செலுத்த ஆரம்பிக்கப் போகிறது இலங்கை.

அந்தக் காலகட்டத்துக்கான வட்டியையும் சேர்த்தாலும் கூட சீன தூதுவர் குறிப்பிட்ட ஏழு பில்லியன் டொலர்களை எட்ட முடியாது. ஒட்டுமொத்தமாக முழு கடன்களையும் திரட்டி முடிக்கும் வரை சீனா அதனை இழந்து போன மூலதனமாக கருதுகிறதோ தெரியவில்லை. சீனத் தூதுவரின் இந்தக் கணக்கு வங்கிகள் நிதி நிறுவனங்களில் வட்டி அறவிடப்படும் முறை போல மர்மமாக உள்ளது. வீட்டுக் கடன்கள் போன்றவற்றுக்கு வட்டி வீதம் எனக் குறிப்பிடப்படும் தொகை உண்மையில் அறவிடப்படுவதில்லை.

அந்த வட்டி கணிப்பீட்டு முறை தவணை கொடுப்பனவு முறை எல்லாமே வித்தியாசமானது. அது ஒரு போதும் கடன் பெறுபவருக்கு புரிவதும் இல்லை. அவர்களுக்கு சாதகமானதாக இருப்பதும் இல்லை. முற்று (22ம் பக்கம் பார்க்க).

## முதலாவது பிறந்த நன்நாள் வாழ்த்து



## செல்வி அய்ஸ்னா சிவதர்சன்

சங்கரத்தை வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சிவதர்சன் ஆரணி தம்பதிகளின் செல்வப்புதல்வி அய்ஸ்னா தனது முதலாவது இனிய பிறந்த நன்நாளை 27 மார்ச் 2025 வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகு எளிமையாகக் கொண்டாடினார். அன்றைய தினம் செல்வி அய்ஸ்னாவும் அவரது பெற்றோர்களும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

செல்வி அய்ஸ்னாவை சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் அருளுடனும் திருச்செந்தூர் முருகனின் ஆசியுடனும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ அவரது பெற்றோர், அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, தாத்தா, ருபன் பெரியப்பா நிமலினி பெரியம்மா, ருஷானி, கிருஷ்னி அக்காமார், சங்கீஷ் அண்ணா, மோகன் பெரியப்பா, ருப்பி பெரியம்மா, சஞ்சனா அக்கா, ஆசை மாமா ரிசன் மாமி சிவாந்தி, மற்றும் உற்றார் உறவினர்களுடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் செல்வி அய்ஸ்னாவை வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடனும்! நலமுடனும்!

# கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு உண்மை என்ன?

கட்டுரையாளர்:-
மட்டக்களப்பில் இருந்து
- கலாநிதி சு.சிவரெத்தினம் -

சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான தமிழர் முற்போக்குக் கழகமும் இணைந்து 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் அரசியல் கூட்டணியினை 15.03.2025 அன்று உருவாக்கியுள்ளனர்.



கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு என்பது சந்திரகாந்தன் மற்றும் வியாழேந்திரன் ஆகியோருடைய சிந்தனையில் முகிழ்ந்த முத்தல்ல.

2018ம் ஆண்டு கிழக்குத் தமிழர்களின் அரசியல் சமூக, பொருளாதார, அரசியல் சீரழிவு கண்டு அவற்றை நிவர்த்திக்கும் முகமாக த.கோபாலகிருஸ்ணன், சட்டத்தரணி த.சிவநாதன் ஆகியோரின் முயற்சியினால் உருவாக்கிய ஓர் அமைப்பே 'கிழக்குத் தமிழர் ஒன்றியம்' ஆகும்.

கிழக்குத் தமிழர் ஒன்றியமானது அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு பொதுச்சின்னத்தில் எதிர்காலத் தேர்தல்கள் அனைத்திலும் கிழக்கில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து அனைத்துத் தமிழ் கட்சிகளையும் அழைத்து களுவாஞ்சிகுடி இராசமாணிக்கம் மண்டபத்தில் ஒரு கூட்டத்தினையும் நடாத்தியிருந்தது.

அங்கு நடந்த பல்வேறு வாதப் பிரதிவாதங்களுக்குப் பின் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாரிப்பது என்றும் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உடன்பாடான கட்சிகள் அதில் கையொப்பம் இட்டு கூட்டமைப்பை உருவாக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டதுக்கு இணங்க கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் அரசியல் பிரிவாக 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' உருவாக்கம் பெற்றது.

இந்த கிழக்குத் தமிழர் கூட்டமைப்பினால் தயாரிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் அனுப்பப்பட்ட போது அகில இலங்கை தமிழர் மகாசபை, தமிழர் விடுதலைக் கூட்டணி.(TULF) ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி (TMVP), வரதராஜப் பெருமாள் தலைமையிலான தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி ஆகிய ஐந்து கட்சிகள் தங்களுடைய உடன்பாட்டைத் தெரிவித்திருந்தன.

இருந்த போதிலும் பின்பு வரதாராஜப் பெருமாள் தலைமையிலான தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஆகிய இரு கட்சிகளும் விலகிக் கொண்டன. இறுதியாக அகில இலங்கை தமிழர் மகாசபை, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி , ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகிய மூன்று கட்சிகளும் கைச்சாத்திடுவது என முடிவெடுக்கப்பட்டது.

ஆனாலும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி பல்வேறு இழுத்தடிப்புகளுக்குப் பின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதைத் தவிர்த்துக் கொண்டது. இறுதியாக அகில இலங்கை தமிழர் மகாசபையும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அதன் அங்கீகாரத்துக்காக 2019ம் ஆண்டு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தது.

எனவே 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் பெயரைப் பயன்படுத்துவதற்கான தார்மீக உரிமை இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட மேற்படி இரு கட்சிகளுக்கும் உரியதே தவிர இதனை புறக்கணித்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு அல்ல என்பதை புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

இன்று கிழக்குத் தமிழர் ஒற்றுமை பற்றிப் பேசுகின்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 2020ம் ஆண்டுத் தேர்தலில் தங்களது கட்சி நலன் சார்ந்தே சிந்தித்தார்கள். கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு எனும் பெயரில் பொதுச்சின்னத்தில் போட்டியிடுவதை அவர்கள் விரும்பவேயில்லை. தங்களுடைய கட்சியின் பெயரும் படகுச் சின்னத்தையும் கிழக்குத் தமிழர்களின் நலனுக்காக விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. ஆனால் அகில இலங்கை தமிழர் மகாசபை கிழக்குத் தமிழர்களின் நலனுக்காக மட்டக்களப்பில் தன்னை தியாகம் செய்யத் தீர்மானித்தது. அந்தவகையில் மட்டக்களப்பில் தனித்து தேர்தலில் போட்டியிடாது படகுச் சின்னத்தை ஆதரிப்பது என்றும் அகில இலங்கை தமிழர் மகாசபையின் சார்பில் தங்களுடைய இரு வேட்பாளர்களை நியமிப்பது என்றும் இது போன்று அம்பாறையிலும் திருகோணமலையிலும் அகில இலங்கை தமிழர் மகாசபை தனது சின்னமான கப்பல் சின்னத்தில்



போட்டியிடுவதென்றும் அதனை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆதரித்து தனது வேட்பாளர்களை கப்பல் சின்னத்தில் நிறுத்துவது என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

இந்த முடிவின்படி மட்டக்களப்பில் அகில இலங்கை தமிழர் மகாசபை தனது வேட்பாளர்களை படகுச் சின்னத்தில் நிறுத்தி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்குச் சார்பாக பிரச்சாரத்தில் ஈடுபட்டது. ஆனால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அம்பாறையிலும் திருகோணமலையிலும் அகில இலங்கை தமிழர் மகாசபையின் வேட்பாளர் பட்டியலுக்கு தங்களுடைய வேட்பாளர்களை நியமிக்கவும் இல்லை, ஆதரிக்கவும் இல்லை.

அத்தோடு வி.முரளிதரன் (கருணா) அகில இலங்கை தமிழர் மகாசபையில் இணைந்து அம்பாறையில் போட்டியிட்டதையும் ஆட்சேபித்தார்கள். இவர்களுடைய இவ்வாறான சுயநலமான நடத்தையினால் அம்பாறையில் தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய ஒரேயொரு தமிழ் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இத்தேர்தலில் இழக்கப்பட்டது. அதற்கான பெரும் பொறுப்பு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியையே சாரும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு எனும் பெயரில் பொதுச்சின்னத்தில் கிழக்கில் போட்டியிட்டிருந்தால் 2020ம் ஆண்டுத் தேர்தலில் மட்டக்களப்பில் இரு பிரதிநிதித்துவமும் அம்பாறையில் ஒரு பிரதிநிதித்துவமும் கிழக்குத் தமிழர் கூட்டமைப்புப் பெற்று அத்துடன் மேலதிகமாக தேசியப் பட்டியல் ஆசனம் ஒன்றும் கிடைக்கப் பெற்று கிழக்கில் தனித்துவம் பேணும் ஒரு மாற்று அரசியல் சக்தியாக உருவாகியிருக்க வேண்டிய கூட்டமைப்பை அப்போது இல்லாமலாக்கியது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியேயாகும்.

தேர்தலில் வெற்றியீட்டிய பின் மாற்று அரசியல் கலாசாரத்தினையும் கிழக்கிற்கான சிறந்த அபிவிருத்தித் திட்டங்களையும் உருவாக்கிச் செயற்பட வேண்டும் என்ற தூர சிந்தனை கொண்டு உழைத்த த.கோபாலகிருஸ்ணன் அவர்களை தேர்தலில் வெற்றியீட்டிய சிவநேசதுரை சந்திரகாந்தன் எள்ளளவும் பொருட்படுத்தாது தன்னுடைய நலனுக்காக எல்லாரும் சேர்ந்து உழைத்த வெற்றியினைப் பயன்படுத்திக் கொண்டார். அதற்கான பலனை 2024ம் ஆண்டு மக்கள் அவருக்கு வழங்கினர்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 2020ம் ஆண்டில் அவர்களுக்கிருந்த அனுதாப அலையினையும் அபிவிருத்தி நோக்கையும் வைத்து தாம் வெற்றியடைவோம் என்ற நம்பிக்கையில் கிழக்கின் அரசியல் ஒற்றுமையினைச் சீர்குலைத்தார்கள்.

ஆனால் இன்று 2024ம் ஆண்டுத் தேர்தலில் கற்ற பாடத்தை அடிப்படையாகக் கொண்டு இப்போது கிழக்குத் தமிழர்களின் அரசியல் ஒற்றுமை, எதிர்கால



நலன் பற்றியெல்லாம் பேசுகிறார்கள். இவர்கள் பேசுகின்ற இந்த ஒற்றுமை, நலன் என்பவை தாம் இழந்த அரசியல் நலன்களையும் சுகபோகங்களையும் மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக போடப்படும் அரசியல் கபட நாடகமேயாகும். எனவே கிழக்கு வாழ் தமிழ் மக்கள் இந்தக் கபட நாடகத்துக்குப் பின்னால் உள்ள சுயநல நோக்கத்தைப் புரிந்து கொண்டு தமக்கான அரசியல் திசையை எதிர்காலத்தில் தீர்மானிக்க வேண்டும்.

## கட்டுரைக்குப் பின்னரான செய்தி


மட்டக்களப்பில் உருவாக்கப்பட்ட கிழக்கு தமிழர் கூட்டமைப்பு புதிய கூட்டமைப்பில் கருணா அம்மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் முரளீதரன் மற்றும் பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் ஆகியோர் இணைந்து கொண்டதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 22 மார்ச் 2025 சனிக்கிழமை மட்டக்களப்பு றிவேரா ஹோட்டலில் கைச்சாத்திட்டனர்.

இந்தநிலையில், கிழக்கு தமிழர் கூட்ட மைப்புடன் கருணா தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று கைச்சாத்தானதையடுத்து, பிரிந்திருந்த கருணா - பிள்ளையான் ஆகி யோர் மீண்டும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

போலித்தேசியவாதிகள் எமது மக்களை தவறாக வழி நடத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது. கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றுவது தான் எமது பிரதான இலக்காகும் என்று கருணா அம்மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

நாங்கள் ஆயத ரீதியான போராட்டத்திலிருந்து எதற்காக ஜனநாக வழிக்கு திரும்பினோமோ அந்த இலக்கை அடை வதற்காவே மீண்டும் இணைந்திருக்கின்றோம். வடக்கு மாகாண மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிராகரித்து விட்டார்கள். அவர்களை எதிரிகளாகவே பார்க்கின்றார்கள். அவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தில் போலித் தேசியவாகளுக்கு இடமளிக்க முடியாது. அவர்களை அகற்ற வேண்டும். அவர்களின் செயற் பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த வகையில் கிழக்கு மாகாண மக்கள் பல விடயங் களில் தெளிவுற வேண்டியுள்ளது. அதற்காக எமது பயணமானது முடிவற்றதாக தொடர்ச்சியானதாக இருக்கும் நாம் வரலாற்றை படைத்தவர்கள். நாம் வரலாற்றை மாற்றியமைத்தவர்கள். ஆகவே எம் முன்னிலையில் வந்து நின்று தேசியம் பேசுவதற்கு எவருக்கும் அருகதையில்லை என்றார்.

# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2


## மணமகள்

**ID08120762** F
43yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

**ID08120764** F
31yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager HR , Sri Lanka

**ID08120768** F
40yrs, 5'7" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , Australia

**ID08120769** F
24yrs, 4'11" , Single , Karthigai , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08120770** F
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior software.. , Sri Lanka

**ID08120771** F
29yrs, 5'5" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , Software engineer , Sri Lanka

**ID08120774** F
34yrs, 5'6" , Single , Rohini , 6 Sevai , Bachelors.. , Research Officer , Sri Lanka

**ID08120775** F
35yrs, 5'1" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Marketing.. , United States

**ID08120776** F
29yrs, 5'6" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , IT Proc Officer , Canada

**ID08120777** F
30yrs, 5'2" , Single , Swaathi , 9 Sevai , Diploma , Lab Tech , Canada

**ID08120778** F
26yrs, 5'4" , Single , Poorattathi , 12 Sevai , Bachelors.. , Nurse , Canada

**ID08120791** F
36yrs, 5'2" , Divorced , Thiruvonam , N/A Sevai , Masters Degree , Senior Finance.. , Sri Lanka

**ID08120792** F
33yrs, 5'2" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Mechanical.. , Germany

**ID08120794** F
24yrs, 5'4" , Single , Poosam , N/A Sevai , Bachelors.. , Dental Assistant , Canada

**ID08120795** F
31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

**ID08120799** F
45yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120800** F
38yrs, 5' , Divorced , Not Specified , N/A Sevai , Masters Degree , Chartered.. , India

**ID08120802** F
20yrs, 5'4" , Single , Chathayam/sadayam , 4 Sevai , Bachelors.. , MSc intended.. , Canada

**ID08120803** F
21yrs, 4'11" , Single , Revathi , N/A Sevai , High School , Beautician , Canada

**ID08120804** F
29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120805** F
30yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka

**ID08120806** F
27yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Audit firm , Sri Lanka

**ID08120807** F
27yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Beautician.. , Sri Lanka

**ID08120808** F
31yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Acadamic Staff , Sri Lanka

**ID08120809** F
32yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , United Kingdom

**ID08120822** F
22yrs, 5'3" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , RN , Canada

**ID08120830** F
28yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior Consultant , United Kingdom

**ID08120804** F
29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120799** F
5yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120795** F
31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

## மணமகன்

**ID08120761** M
34yrs, 5'8" , Awaiting Divorce , Not Specified , N/A Sevai , Masters Degree , Own jewelry.. , Sri Lanka

**ID08120763** M
34yrs, 5'9" , Single , Anusham , N/A Sevai , Bachelors.. , Business Administration , Sri Lanka

**ID08120765** M
51yrs, 5'6" , Divorced , Aayilyam , N/A Sevai , Postgraduate.. , Book keeping.. , Canada

**ID08120766** M
34yrs, 5'4" , Single , Pooraadam , 1 Sevai , High School , Business , Canada

**ID08120767** M
33yrs, 6' , Single , Not Specified , N/A Sevai , Diploma , CUSTOMER Service.. , Sri Lanka

**ID08120772** M
34yrs, 6'2" , Single , Not Specified , N/A Sevai , High School , Pharmach Own.. , Sri Lanka

**ID08120773** M
46yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Elecerician.. , Sri Lanka

**ID08120779** M
35yrs, 5'5" , Single , Aayilyam , N/A Sevai , High School , Company Forklift.. , Canada

**ID08120785** M
52yrs, 5'9" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Optician , Sri Lanka

**ID08120787** M
33yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Medical rep , Sri Lanka

**ID08120788** M
22yrs, 5'4" , Single , Rohini , N/A Sevai , High School , Phone shop , Sri Lanka

**ID08120789** M
35yrs, 6'1" , Single , Rohini , N/A Sevai , High School , Tba , Canada

**ID08120790** M
21yrs, 4' , Single , Not Specified , N/A Sevai , High School , Casc , Anguilla

**ID08120793** M
25yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

**ID08120796** M
30yrs, 5'9" , Annulled , Thiruvonam , 8 Sevai , High School , Truck Driver , Canada

**ID08120797** M
33yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , IT Consultant , Sri Lanka

**ID08120801** M
69yrs, 5'10" , Divorced , Visaakam , N/A Sevai , Diploma , Security Officer , Canada

**ID08120811** M
36yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Team Leader , Canada

**ID08120810** M
42yrs, 6' , Single , Uthiram , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka

**ID08120812** M
32yrs, 5'7" , Single , Avittam , 10 Sevai , Masters Degree , Cyber Security.. , Sri Lanka

**ID08120813** M
30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Pharmacy , Canada

**ID08120814** M
43yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager , Canada

**ID08120816** M
22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Canada

**ID08120817** M
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Self Employee , Sri Lanka

**ID08120818** M
36yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120820** M
30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Senior manager , Sri Lanka

**ID08120821** M
30yrs, 5' , Single , Avittam , N/A Sevai , Bachelors.. , Manager Sri Lanka

**ID08120829** M
38yrs, 5'8" , Single , Revathi , N/A Sevai , High School , Restaurant , France

**ID08120786** M
36yrs, 5'5" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120710** M
22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

# தேசபந்து தென்னக்கோனை ஒளித்து வைத்திருந்த தரப்பினர் யார்? ரணிலா? டிரான் அலஸ்ஸா?

நாட்டின் 36ஆவது பொலிஸ்மா அதிபராக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட தேசபந்து தென்னக்கோன் அப்பதவியை வகிக்க முடியாதென கடந்த வருடம் ஜுன் மாதம் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அவர் பொலிஸ் மாஅதிபராக செயற்படுவதை இடைநிறுத்துமாறு ஒன்பது அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அதன் அடிப்படையிலேயே உயர்நீதிமன்றமானது அத்தடையை பொலிஸ் மாஅதிபருக்கு விதித்தது. தற்போது பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரே அப்பதவியில் இருக்கின்றார். இந்நிலையில் உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்குப் பிறகு தேசபந்து தென்னக்கோனைப் பற்றிய எந்த செய்திகளும் ஊடகங்களில் வெளிவரவில்லை.



இந்நிலையில் பெப்ரவரி 28 ஆம் திகதி மாத்தறை நீதவான் நீதிமன்றம் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்யும்படி ஒரு உத்தரவை பிறப்பித்திருந்தது.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி மாத்தறை வெலிகம பெலேன பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூ டு சம்பவத்தில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட கொழும்பு குற்றப் பிரிவின் (சி.சி.டி) எட்டு முன்னாள் அதிகாரிகளைக் கைது செய்வதற்காகவே மாத்தறை நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்திருந்தது என்பது முக்கிய விடயம்.

ஆனால் அதற்குப் பிறகே பொலிஸ் மற்றும் குற்றப்புலனாய்வு துறையினருக்கு தேசபந்து தென்னக்கோன் எத்தகையதோர் நபர் என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அவர் தலைமறைவாகியிருந்தமையை அவர்கள் காலந் தாழ்த்தியே அறிந்து கொண்டனர். எனினும் அவர் எங்கு இருக்கின்றார் என்பதை இறுதி வரை அறிந்து கொள்ளமுடியவில்லை.

ஒரு வார காலம் தேசபந்து தென்னக்கோன் கண்ணாமூச்சு விளையாட்டை ஆடினார். இந்த விவகாரம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அவமானப்படுத்தியது.

அதே வேளை பொலிஸ் தரப்பிலும் சிலர் தேசபந்துவுக்கு ஆதரவாக செயற்படுவதை அரசாங்கம் அறிந்து கொண்டது. இதையடுத்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சானது அதிரடியாக ஒரு உத்தரவை பிறப்பித்திருந்தது. அதாவது தேசபந்து தென்னக்கோன் மறைந்திருப்பதற்கு உதவி செய்தவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பே அது.

இந்த அறிவிப்புக்கு பலன் இருந்தது என்று தான் கூற வேண்டும். உடனடியாக சுதாகரித்துக் கொண்டு தென்னக்கோன் தரப்பு அவரது கைதை தடுக்கும் வகையில் சட்டத்தரணிகள் ஊடாக ரிட் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர். அதை நிராகரித்த நீதிமன்றம் தேசபந்து தென்னக்கோனுக்கு பகிரங்க பிடியாணை உத்தரவை பிறப்பித்தது. இதையடுத்து வேறு வழியின்றி அவர் தனது சட்டத்தரணிகளுடன் 19 ஆம் திகதி மாத்தளை நீதவான் நீதிமன்றில் சரணடைந்தார். ஆனால் இங்கு தான் கதையே பிறக்கின்றது.

அவர் நீதிமன்றத்துக்கு வந்த விதம் அப்படியானது. நன்றாக உடையணிந்து சொகுசு காரில் அவர் வந்திறங்கினார். அவருக்கு அதிவிசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவர் நேரடியாக நீதிமன்றத்துக்கு வந்து சாதாரண நபர் போன்று எவ்வாறு அமர்ந்திருக்க முடியும்? ஆனால் அவர் எதற்கும் அஞ்சாதவர் போன்று இறுமாப்பாக அமர்ந்திருந்தார்.

அவருக்கு பிணை எடுப்பதற்காக தலைநகர் உட்பட பல பகுதிகளிலிருந்தும் சுமார் ஐம்பது சட்டத்தரணிகள் வருகை தந்திருந்தனர். இவர்கள் எல்லாம் எதற்காக இங்கு வந்திருக்கின்றார்கள்? இவர்களை அனுப்பியது யார்? இந்த சட்டத்தரணிகளுக்கு பணம் கொடுக்கும் தரப்பினர் எவர் போன்ற பல கேள்விகள் இங்கு எழுந்தன.

தேசபந்து தென்னக்கோனுக்கு பிணை வழங்கி விட்டால் அவர் அடுத்த கட்டமாக எவ்வாறு தந்திரமாக செயற்படுவார் என்பதை சட்டமா அதிபர் திணைக்களம் தெரிந்து வைத்திருந்தது. மிக முக்கியமாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ் அதை அறிந்து வைத்திருந்தார். நேர்மையான அதே வேளை தைரியமான சட்டத்தரணி என்ற பெயர் பெற்ற அவர் சம்பவத்தை அறிந்து நேரடியாக மாத்தறை நீதவான் நீதிமன்றம் வந்து இறங்கினார்.

அதன் பிறகு அவரது வாதத்தால் தேசபந்துவுக்காக வருகை தந்திருந்த அனைத்து சட்டத்தரணிகளும் வாயை மூடிக்கொண்டு கதைக்க முடியாது மௌனம் காத்து விட்டனர். மிக சிறப்பாக நியாயங்களை எடுத்துரைத்த அவர் தேசபந்துவுக்கு பிணை வழங்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். அதையடுத்தே தேசபந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

எனினும் இருபது நாட்கள் அவர் மறைந்திருந்த இடம் எது. அவரை பாதுகாப்பாக தங்க வைத்திருந்தவர்கள் யார் என்பது குறித்த சந்தேகங்களுக்கு இப்போது சிறிது சிறிதாக விடை கிடைக்கத் தொடங்கியுள்ளன.

ரணில் ஜனாதிபதியாக இருந்த போது பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் டிரான் அலஸ். அவரின் திட்டமே யுக்திய நடவடிக்கை. இதன் போது போதை பொருள் பாவனை மற்றும் ஏனைய குற்றங்களோடு தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டனர்.




கடந்த 2023 டிசம்பர் 31ஆம் திகதி மாத்தறை. வெலிகம பகுதியில் உள்ள று15 ஹோட்டலுக்கு முன்னால் வெலிகம பொலிஸ் நிலைய அதிகாரிகளால். கொழும்பு குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகள் குழு மீது மேற்கொண்ட துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் வெலிகம பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொழும்பு குற்றவியல் விசாரணைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் மரணமடைந்திருந்தார்.

குறித்த சம்பவத்தின் பின்னணியில் அப்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் தேசபந்து தென்னக்கோன் ஆகியோருக்கு உள்ள தொடர்புகள் பற்றி அப்போது பேசப்படவில்லை. துப்பாக்கிச் சூடு நடத்திய வேன் அங்கிருந்து தப்பிச்சென்ற போது ஓரிடத்தில் அதை தடுத்து நிறுத்தினர் பொலிஸார். வேனில் பயணித்திவர்களிடம் கொழும்பு குற்றப்புலனாய்வு அடையாள அட்டைகள் இருந்தன. ஆனாலும் பொலிஸார் அவர்களை விடவில்லை. எனினும் அப்போது பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரிடமிருந்து வந்த தொலை.பேசி அழைப்பின் பின்னர் அவர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஆகவே இந்த சம்பவத்தின் சூத்திரதாரி யார் என்பதை ஊகிக்க முடிகின்றது. எது எப்படியானாலும் தேசபந்து தென்னக்கோனை மறைத்து வைத்திருந்தவர்களில் முன்னாள் அமைச்சர் டிரான் அலசின் பெயர் அடிபடுகின்றது. இதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் உதவியிருக்கலாம் என்றும் பேசப்படுகின்றது.

தேசபந்து மாத்தறை நீதிமன்றில் சரணடைந்த போது அவரின் பிணைக்காக சென்ற சுமார் ஐம்பது சட்டத்தரணிகளுக்கும் (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# மட்டக்களப்பு நூலகமும் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளின் காழ்ப்புணர்வும்

(21ம் பக்கத் தொடர்ச்சி) கிழக்கு பல்கலைக்கழகம், திருகோணமலை வளாகம், விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஹிஸ்புல்லாவின் புனானை பல்கலைக்கழகம், கல்விக்கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை போன்ற கல்வி நிறுவனங்களுக்கு பெரும் சேவை ஆற்றக்கூடிய ஒன்று இந்த நூலகம். ஆயிரக்கணக்கான வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்கள், கல்வி டிப்ளோமோ மற்றும் கல்வி நிர்வாக சேவை பொது நிர்வாக சேவை, கடல்கடந்த நிர்வாக சேவை போன்ற மேற்படிப்பாளர்களுக்கும் இந்த நூலகம் மட்டக்களப்பின் சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்தியின் அடிப்படையாக பெரும் பங்களிப்பை செய்யமுடியும்.

இதை பிள்ளையானின் நூலகம் என்று புறக்கணிக்கின்ற தமிழ்த்தேசிய அரசியல் மட்டக்களப்பு மக்களுக்கு எதிரான சமூகவிரோத அரசியல். மாடு களவு போகும் என்று வலையிறவுக்கும், மண்முனைக்கும் பாலம் வேண்டாம் என்ற மூதாதையரின் இன்றைய பரம்பரையின் அரசியல் வங்குரோத்து. இப்போது ராஜன்பாலம், கருணாபாலம் என்று வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு அதில் பயணம் செய்யாது வாவிக்கால் பாய்ந்தா செல்கிறீர்கள்? தமிழ்த்தேசியத்தின் ஜனாதிபதி பொதுவேட்பாளருக்கும் சேர்த்துத் தான் இந்த கேள்வி.

மட்டக்களப்பு மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட என்.பி.பி. எம்.பி க.பிரபு உட்பட, மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு தலைவர், பிரதி அமைச்சர் ஹே. அருண் உட்பட எவரும் இந்த நூலகத்திற்கு நிதி ஒதுக்கீடு குறித்து வாய் திறக்கவில்லை. எடுத்த தெற்கெல்லாம் சத்த வெடிச்சுடும் தமிழ்த்தேசிய எம்.பி.க்களும் கண்டு கொள்ளவில்லை. பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவக் காரணமாக இருந்த ஹிஸ்புல்லா எம்.பி. கூட தமிழ்த்தேசிய அரசியலோடு முரண்படாமல் உள்ளூராட்சி தேர்தல் அரசியலை நகர்த்துதற்காக வசதியாக மறந்து விட்டார் போலும்.

சர்வதேச உதவியுடன் திருகோணமலையில் 70 எண்ணெய்க் கிணறுகள், வடக்கில் தென்னை முக்கோண திட்டத்தின் கீழ் 500 மில்லியன் ரூபாய் செலவில் 16, 000 ஏக்கர்களில், 25 இலட்சம் தென்னங்கன்றுகள் பயிரிடப்படவுள்ளது. வடக்கில் பாலங்களை புனரமைப்புக்காக 5000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒப்பீட்டளவில் கிழக்கிற்கான ஒதுக்கீடுகள் குறைவானவை. அரசியல் பழிவாங்கல் இல்லை, கட்சி அரசியல் பாகுபாடு இல்லை என்று கூறுகின்ற என்.பி.பி.யும் அதையே செய்கிறது. ஒரு பக்கத்தில் தமிழ்த்தேசியத்தை பாராளுமன்ற தேர்தலில் ஆதரித்த மட்டக்களப்பு மக்களை பழிவாங்கி கட்சி அரசியல் செய்கிறதா?

பிள்ளையானின் நூலகத்தை தான் விடுங்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை அனர்தங்களாலும் யுத்தத்தினாலும் அழிக்கப்பட்ட தென்னைப் பயிர் செய்கை அபிவிருத்தி குறித்தோ, மீன்பிடி, உல்லாசப் பிரயாண அபிவிருத்தி குறித்தோ மற்றும் சமூக, பொருளாதார அபிவிருத்தி குறித்தோ நீங்கள் பேசவில்லை. சில வேளைகளில் ஊடக விளம்பரத்திற்காக குத்து மதிப்பாக கூட்டத்தில் கோவிந்தா போட்டிருக்கலாம். இவை எல்லாம் வரவு செலவுத் திட்ட உரையல்ல அச்சாறு கத்தாவ

ஏன்? அரசியல் அமைப்பு திருத்தத்தை மூன்று ஆண்டுகளுக்கு கிடப்பில் போடவேண்டாம் என்று எத்தனை தமிழரசுக்கட்சி எம்.பிக்கள் அரசாங்கத்தை கோரியிருக்கிறீர்கள். நீங்கள் கேட்க மாட்டீர்கள். ஏனெனில் தமிழரசு சர்வரோக நிவாரணி அதை அரசியல் அமைப்பு திருத்தம் வரும் போது பார்த்துக் கொள்வோம் என்று அநுரகுமார அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கியிருக்கிறது.

ஆனால் முன்னுக்கு பின் முரணாக உள்ளூராட்சி தேர்தலில் மீண்டும் சமஷ்டி பேசு பொருளாகிறது. ஏன்? அதையும் மூன்று ஆண்டுகளுக்கு தள்ளிப் போட்டு வரும் போது பார்த்துக் கொண்டால் என்ன? குறைஞ்சா போகும்…? அடுத்த பாராளுமன்ற தேர்தல் வரைக்கும் அரசியல் அமைப்பு திருத்தம் வராது விட்டாலும் ‘வாய்ச்சுப் போய்ச்சி’ தேர்தல் பிரச்சாரத்திற்கு அநுரகுமார தீனி போட்டதற்காக தோழில் தட்டவேண்டியது தான். வேறென்ன….?

மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.களுக்கு ஒதுக்கப்படும் தலா 10 மில்லியன் ரூபாய் பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலாவது ஒரு குறிப்பிட்ட தொகையை ஐந்து எம்.பி.க்களும் ஒதுக்கி மட்டக்களப்பு நூல்நிலையம் விரைவில் பூர்த்தியடைய நடவடிக்கை எடுக்க வேண்டியது உங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு நீங்கள் செய்ய வேண்டிய ஒரு சமூக அரசியல் கடமையாகும்.


கல்விச்சமூகம் என்று கூறிக் கொள்பவர்கள் , சிவில் அமைப்புக்கள், பல்கலைக்கழக சமூகம், பல்கலைக்கழக மாணவர் அமைப்பு போன்றவை இது விடயத்தில் காழ்ப்புணர்ச்சி கட்சி அரசியலுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். மட்டக்களப்பின் அபிவிருத்தியை கட்சி அரசியலில் இருந்து மீட்டெடுக்க வேண்டும். அபிவிருத்தியும், அதிகாரப் பகிர்வும் கட்சிக்கல்ல மக்களுக்கானது.

நீங்கள் அனைத்து அரசியல் தரப்பும் மட்டக்களப்பு மக்கள் அபிவிருத்திக்கு வழங்கிய ஆணையை மதித்து நூல்நிலைய அபிவிருத்திக்கும் உங்கள் நிதி ஒதுக்கீட்டு பங்களிப்பை செய்யாத வரை, பிள்ளையான் அரசியலில் நிலைக்கலாம் அல்லது நிலைக்காமல் போகலாம். ஆனால் மட்டக்களப்பு நூல் நிலையம் ‘பிள்ளையானின் நூல் நிலையம்’ என்று மக்கள் பேச்சு வாக்கில் வைத்த பெயரே நிலைத்திருக்கப் போகிறது.


NO. #1 ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST



World Famous Indian Astrologer
PANDIT: SAI RAM



Face Reading, Palm Reading,
Horoscope & Date of Birth

SOLUTIONS & SUGGESTIONS:

OPEN 7 DAYS
9 AM to 7.30 PM

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.

Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob
Vasthu Prob
Real Estate
and all other

Call for 1 FREE QUESTION

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள்
பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி
ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.
துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம்,
தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம்,
கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள்,
எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம்,
பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள
ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

100% GUARANTEE

+1 437-829-1722
2993 Islington Ave, North York, ON, M9L 2K9
(Major intersection: STEELES & ISLINGTON)

# மட்டக்களப்பு நூலகமும் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளின் காழ்ப்புணர்வும்

கட்டுரையாளர்:-
அழகு.குணசீலன்

கிழக்கு மாகாணம் பொருளாதார அபிவிருத்திக்கான பெரும் சாத்தியக் கூறுகளைக் கொண்ட மாகாணங்களுள் ஒன்றாகும். சுகாதாரம், விவசாயம், மீன்பிடி, சுற்றுலா மற்றும் சமூக வலுவூட்டல் ஆகிய துறைகளில் முக்கியமாக கவனம் செலுத்தி, உட்கட்டமைப்பு வாழ்வாதார மேம்பாட்டிற்கு ஆதரவளிக்கும் வகையில் இந்திய பல்துறை மானிய உதவியுடன் கிழக்கு மாகாணத்தில் விரிவான அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாங்கள் முன்மொழிகிறோம்.

கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பாக ஜனாதிபதியின் 50 பக்க வரவு செலவுத் திட்ட உரையில் 35 வது பக்கத்தில் உள்ள நீண்ட வாசகம் இது. ஒட்டுமொத்தமாக கிழக்கு மாகாண அபிவிருத்தியை இந்திய அரசிடம் கையளிக்கின்ற முன்மொழிவை செய்திருக்கிறார் ஜனாதிபதி.

வடக்கு மாகாணத்திற்கு எந்த வகையிலும் குறைத்து மதிப்பிட முடியாத அளவுக்கு, இன்னும் சொன்னால் அதற்கும் கூடுதலாக இரு தரப்பு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பிரதேசம் கிழக்கு. இதில் இருக்கின்ற இன்னொரு முக்கியத்துவம் கிழக்கின் பன்மைத்துவ சமூக கட்டமைப்பு. இங்கு பொருளாதார வாழ்வியலை மட்டும் யுத்தம் பாதிக்கவில்லை அதற்கும் மேலாக பன்மைத்துவ சமூக வாழ்வியலையும் பாதித்துள்ளது.

சர்வதேச ஆய்வுகள் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் தென்னிலங்கையை விடவும், வடக்கை விடவும், கிழக்கு மாகாணத்தையே அதிகாரப்பகிர்வு விடயத்தில் அவசியத்தையும், அதில் உள்ள வில்லங்கங்களையும் பேசுகின்றன. ஆனால் அநுர அரசாங்கம் அரசியல் தீர்வை சும்மா காலம் கடத்தி கடந்து செல்லப் பார்க்கிறது.

ஆக கிழக்கு அபிவிருத்தி என்பது பொருளாதாரம் சார்ந்து மட்டும் அல்ல இன உறவுகளில் விரிவை ஏற்படுத்தியுள்ள அரசியல் தீர்வின் சமூக அபிவிருத்தியையும் சார்ந்துள்ளது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை இராணுவத் தீர்வாக முடிவு செய்து யுத்த களத்தில் பின்னணியில் நின்ற ஜே.வி.பி.யின் தலைமை இன்னும் கிழக்கின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாக தாங்களும் பங்காளிகளாக இருந்த யுத்தத்தை தவிர்த்து வேறு திசையை காட்ட முயற்சிக்கிறது.

சில வேளை இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கை மூலம் யுத்தம் தொடர்ந்ததற்கும் இன உறவுகள் பாதிக்கப்பட்டதற்கும் ஜே.வி.பி. போன்று இந்தியாவுக்கும் பங்குண்டு என்று அநுரகுமார சொல்லாமல் சொல்கிறாரா? என்பது அவருக்கே வெளிச்சம். அதனால் கிழக்கை இந்தியாவிடம் ஒப்படைக்கிறாரா? அன்று ஆக்கிரமிப்பாளராக இருந்த இந்தியா இன்று பொருளாதார மீட்பராக மாறியிருப்பது ஜே.வி.பி- என்.பி.பி. ஆட்சி ஏற்படுத்தியுள்ள முக்கியமான '' மாற்றம்'' தான்.

இந்த நாட்டில் சிறுபான்மை தேசிய இனங்களின் அரசியல் அதிகார உரிமை பிரச்சினையை பொருளாதார மேம்பாட்டின் ஊடாக மட்டும் தீர்க்கலாம் என்று ஜே.வி.பி. கருதினால் அது இன்னும் தோல்வியுற்றும், காலாவதியுமான பாரம்பரிய இடதுசாரி அரசியலையே செய்கிறது என்று கொள்ள வேண்டியுள்ளது. ஒரு வகையில் இடதுசாரி போர்வையில் பாரம்பரிய இடதுசாரி தலைமைகள் செய்த பௌத்த, சிங்கள பேரினவாத அரசியலையே செய்ய விளைகிறது. இதற்கு ஜே.வி.பி. இந்த வரவு செலவுத்திட்டத்தில் புத்தசாசன அமைச்சுக்கு ஒதுக்கியுள்ள பெருந்தொகை நிதி ஒரு சான்று. மற்றைய மதங்களையும் சமத்துவமாக பார்த்துக் கொள்வோம் என்பது இரண்டாம், மூன்றாம் தரத்திலான வெறும் 'போடு காய்' அரசியல். என்.பி.பி. ஆட்சியாளர்கள் இந்த நாட்டில் பொருளாதார மீட்சியை ஏற்படுத்த வேண்டுமானால் அதற்கு தேவையான அடிப்படை ஐ.எம்.எப்.போடு ஒத்தோடும் பொருளாதார நகர்வுகளுடன் சமாந்தரமாக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வையும் முன்வைக்க வேண்டும். இல்லையெனில் புள்ளிவிபர ரீதியான பொருளாதார வளர்ச்சியை அட்டவணைப் படுத்தினாலும் பொருளாதார அபிவிருத்தி என்ற இலக்கு இலகுவானதல்ல.



என்.பி.பி. தனது தேர்தல் மேடைகளில் குறிப்பிட்ட மாற்றம் இந்த சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பு மாற்றத்தை குறிக்கிறதே அன்றி வெளிநாட்டு உதவிகளுடனும், சர்வதேச நிதிநிறுவனங்களின் உதவிகளுடனும் தேர்தல்களை இலக்கு வைத்து செய்யப்படும் நிவாரணங்களை அல்ல. பொருளாதார வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி என்பவை இரு வேறுபட்ட விடயங்கள். வளர்ச்சி வெறும் புள்ளிவிபரங்கள் சார்ந்தது. அந்த புள்ளிவிபர முன்னேற்றங்கள் மக்களுக்கு எவ்வாறு பங்கிடப்பட்டுள்ளது என்பது மக்களின் அடிப்படை வாழ்வியல் கட்டமைப்பில் ஏற்படுகின்ற மாற்றத்தை குறித்து நிற்கின்றது.

ஒரு பெரும் பொருளாதார புள்ளிவிபர ரீதியான வளர்ச்சி இன்றைய உலகமயமாக்கல் தாராள பொருளாதாரத்தில் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்திடம் குவிவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். இதை கடந்த கால அபிவிருத்தியின் ஊழல் மோசடிகளில் இருந்தாவது அநுர அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். அதுவும் இலங்கைபோன்ற பின்தங்கிய, பொருளாதார மந்த நிலையுள்ள நாடுகளில் இந்த அபத்து ஒப்பீட்டளவில் அதிகமானதாக அமையும். அரசாங்கத்தினால் தனியார் சந்தை பொருளாதாரத்தை தான் நினைப்பது போல் கட்டுப்படுத்த முடியாது என்பதற்கு அண்மைக்கால அத்தியாவசிய பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட உயர்வு ஒரு சான்று.

சந்தை பொருளாதாரத்தில் அரசாங்கத்தை விடவும் முதலாளிகள் தீர்மானம் எடுக்கும் சக்தியாக உள்ளனர். இதுவே இந்த ஆண்டின் ஆரம்பத்தில் சந்தையில் நடந்தது. அது மேலும் நடக்காது என்று யாரும் உத்தரவாதம் அளிக்க முடியாது.

கிழக்கு மாகாணத்திற்கு கடந்த மூன்று வரவு செலவுத் திட்டத்திலும் ஒதுக்கப்பட்ட நிதியை விடவும் இன்றைய வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பது புள்ளிவிபரம். 2023 — 2. 947 மில்லியன் ரூபாய். 2024 — 4.854 மில்லியன் ரூபாய். 2025- 8. 667 மில்லியன் ரூபாய். ஆனால் இந்த ஒதுக்கீடு வரவு செலவுத் திட்ட அறிக்கையில் உள்ள வெறும் தரவு மட்டுமே. இந்த நிதி ஒதுக்கீட்டை செய்யவேண்டியது இந்திய அரசு. அதை எத்திட்டங்களுக்கு பயன்படுத்துவது என்பதையும் தீர்மானிப்பதில் இந்தியாவின் கையே ஓங்கி இருக்கப் போகிறது. இந்த வகையிலும் இதன் நலன்கள் கிழக்குமாகாண மக்களின் அபிவிருத்தி அபிலாஷைகளை எந்த அளவுக்கு பிரதிபலிக்கப் போகின்றன? அவ்வாறு இல்லையெனில் அந்த இந்திய நிதிப் பாய்ச்சலை சரியாக நெறிப்படுத்துகின்ற வல்லமை இலங்கை அரசாங்கத்திற்கு இருக்கிறதா? என்று கேள்வியையும் இங்கு கேட்க வேண்டியுள்ளது. இது குறித்து வழமை போல் தமிழ்த்தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராமுகமாகவே உள்ளனர். அவர்களின் உரைகள் துறை சார்ந்தவையாகவோ தரவுகளையும், சரியான தகவல்களையும் கொண்டவையாக அன்றி வெறும் குத்து மதிப்பு கத்தலாகவே உள்ளது.

அண்மையில் பட்டலந்த விவகாரத்தில் மட்டக்களப்பு எம்.பி. ஒருவர் வடக்கு கிழக்கு வதை முகாம்கள் குறித்தும் விசாரணை கோரியிருந்தார். அதற்கு ஈழநாடு பத்திரிகையில் வெளியான கருத்து சித்திரம் நல்ல பதில்.அதில் அப்புக்குட்டி அண்ணே இப்படிக் கேட்கிறார்......

எம்.பி- பட்டலந்த சித்திரவதை முகாம் 37 வருடங்களுக்கு பின்னர் வெளி வந்துள்ளது. இவ்வாறு வடக்கு கிழக்கில் இயங்கிய பல முகாம்களில் தமிழர்கள் படுகொலை மற்றும் சித்திரவதை செய்யப்பட்டனர்.


அப்புக்குட்டி அண்ணே- பொல்லுக் குடுத்து அடி வாங்கக்கூடாது தம்பி. எந்த முகாம்களைச் சொல்லுறியள்? முகாம்களை பற்றிய விபரங்களோட .முடிஞ்சால் சாட்சியளோட சொல்ல வேணும். அரசாங்கம் பட்டலந்தவை வெளியே எடுக்கேக்க தான் உங்களுக்கு இதுகள் பற்றி நினைவுக்கு வரும் எண்டுறியளோ?

நம்மவர்களின் உப்புச் சப்பற்ற பாராளுமன்ற உரைகளுக்கு அப்புக்குட்டி அண்ணேயின் பதில் ஒரு உரைகல். பொல்லுக் குடுத்து அடி வாங்கக்கூடாது தம்பி எந்த முகாம்களை சொல்லுறியள்? என்ற கேள்விக்கு துணுக்காய் முதல் குடும்பிமலை வரை பல முகாம்கள் புதைக்கப்பட்டுள்ளன என்பது அந்த எம்.பிக்கு தெரியுமோ இல்லையோ அப்புக்குட்டி அண்ணேக்கு தெரிகிறது. இது ஒரு பக்கக் கண்ணை தங்களாகவே குருடாக்கி கொள்கின்ற பேரின, குறும் தேசியவாத அரசியல் வியாபாரிகளுக்கு.


வரவு செலவுத் திட்டத்தில் யாழ்ப்பாண பொது நூலகத்திற்கு 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது முழு இலங்கையிலும் பிற பிராந்திய நூல் நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட 200 மில்லியன் ரூபாய்களில் 50 வீதம். அல்லது பிராந்திய நூல்நிலையங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டில் 33.3 வீதம்.(1-3). இதற்கு அநுரகுமாரவை தோளில் தடவ நமது தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளும் தவறவில்லை. இதன் மூலம் அவர் வடக்கில் உள்ளூராட்சி அரசியலுக்கு முதலிட்டாலும் ஒரு வகையில் தோழருக்கு தோளில் காட்டவேண்டிய விடயம் தான்.

ஆனால் மட்டக்களப்பில் ஒரு நூல் நிலையம் அமைக்கப்பட்டு இன்னும் நிறைவு பெறாத நிலையில் கிடக்கிறது. அது இந்த ஆசான்களுக்கு தெரியவில்லை. இந்த நூல் நிலையம் மட்டக்களப்பு தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளின் எம்.பி.க்கள்- மாநகர முதல்வர், உதவி முதல்வர் போன்றவர்களின் கட்சி அரசியல் காழ்ப்புணர்ச்சியினால் தான் இந்தளவுக்கு இழுபடுகிறது. இன்னும் இவர்களுக்கு மட்டக்களப்பு அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி பற்றி பேசுவதற்கும், எழுதுவதற்கும் தகுதி இருக்கிறதா? மட்டக்களப்பு மக்கள் மீதான உங்கள் சமூக அக்கறை என்ன? இந்த நூலகம் தமிழ்த்தேசிய அரசியலின் சகல சுத்துமாத்துக்களையும் கடந்துதான் கட்டுமானங்களை செய்ய வேண்டியிருந்தது. இது வரலாறு. (20ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! மதிப்பு அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் வேகமான போக்கு காணப்படும். கிடப்பில் இருந்த கடன்கள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் உங்களுக்கு மனவருத்தத்தை தருவதாக இருக்கலாம். கவனமாக கையாள்வது நல்லது.





ரிஷபராசி அன்பர்களே! மனோதைரியம் கூடும். புதிய நட்பு கிடைக்கும். எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். பண வரத்து இருந்தாலும் தேவை அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர்களால் நன்மை உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் கிடைக்கலாம்.





மிதுனராசி அன்பர்களே! சுப காரிய தடைகள் அகலும். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின்தங்கிய நிலை மாறும். எதிர்பார்த்த ஆர்டர்கள் வந்து சேரும். வியாபார போட்டிகள் தடை தாமதங்கள் நீங்கும். உத்தியோகத்தில் சாமர்த்தியமாக செயல்பட்டு மேலகாரிகளின் பாராட்டுகளை பெறுவர். பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் உண்டாகும்.





கடகராசி அன்பர்களே! தடைகளை தகர்த்தெறிந்து முன்னேற்றம் காண்பீர்கள். தெளிவான முடிவு எடுப்பதன் மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். அரசாங்கம் தொடர்பான விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். கடினமான வேலைகள் கூட சுலபமாக முடியும். மரியாதையும், அந்தஸ்தும் அதிகரிக்கும். கடினமான முயற்சிகள் கூட எளிமையாக செய்ய முடியும். தொழில் வியாபாரத்தில் கடன் பாக்கிகள் வசூலாகும்.





சிம்மராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். நினைத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் வியா பாரத்தில் பார்ட்னருடன் அனுசரித்து செல்வது நல்லது. வியாபார போட்டிகள் குறையும்.




கன்னிராசி அன்பர்களே! காரிய வெற்றி உண்டாகும். புத்தி சாதுரியத்தால் எதையும் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். செவ்வாய் சஞ்சாரத்தால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். உத்யோகத்தில் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. புதிய பொறுப்புகள் ஏற்க வேண்டி இருக்கும்.




துலாம்ராசி அன்பர்களே! ஆராய்ந்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். மருத்துவம் சார்ந்த செலவுகள் நேரலாம். ஆயுதங்கள் கையாளும் போதும், வாகனங்களை ஓட்டும் போதும் எச்சரிக்கை அவசியம். அடுத்தவர்களுக்கு உதவ போய் வீண் பழி ஏற்படலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள்





விருச்சிகராசி அன்பர்களே! எதையும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் வைப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்பட்டாலும் வந்து சேர்வதில் எந்த தடைகளும் இருக்காது. உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! தடைப்பட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். ராசியில் குரு இருப்பதன் மூலம் ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களிடம் நன்மதிப்பை பெறுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் நேர்மையாக சிறப்பாக பணிகளை செய்து மேலதிகாரிகளிடம் பாராட்டுக்கள் கிடைக்க பெறுவர்.




மகரராசி அன்பர்களே! கொடுக்கல், வாங்கலில் இருந்த பிரச்சனை தீரும்.எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதகமாக இருக்கும். தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும். தடைபட்ட ஆர்டர்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலையை செய்து முடித்து நன்மதிப்பை பெறுவார்கள்.




கும்பராசி அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம். கவனமாக இருப்பது நல்லது. கண் சம்பந்தமான கோளாறுகள் ஏற்படலாம். வேளை தவறி உணவு உண்ணும்படி நேரலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். வேலை செய்யும் இடத்தில் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது




மீனராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும். பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் மற்றும் கேதுவால் பொருள்வரத்து அதிகரிக்கும். வாகனம், பூமி மூலம் லாபம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். தைரியாதிபதி சூரியனும் தொழில் ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கிறார். எதிர்பார்த்த லாபம் வரும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த ஆர்டர்கள் கைக்கு வந்து சேரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## 19 வயதில் கைது செய்யப்பட்ட 2 பேர்....

(4ம் பக்கத் தொடர்ச்சி) அதில் நாங்கள் தொடர்ச்சியாக வேலை செய்து கொண்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை மிகவும் முக்கியமானது ஒன்று. இந்த அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக .தொடர்ச்சியாக நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம். இந்த நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அரசியல் கைதிகள் பல்வேறு ஆண்டுகளாக சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றனர். இன்று 30 ஆண்டுகளிற்கு மேல் இந்த சிறைச்சாலைக்குள் பல அரசியல் கைதிகள் உள்ளனர்.

நான் அவர்களில் ஒரு சிலரை பார்ப்பதற்காக இங்கு வந்தேன். கிட்டத்தட்ட 19 வயதில் கைதுசெய்யப்பட்ட, பத்தொன்பது வயதில் கைது செய்யப்பட்ட சிவகுமார் பார்த்தீபன் என்ற இருவர் முப்பது வருடங்கள் கடந்தும் இன்று 50 வருடங்கள் ஆகியும் விடுதலையடைய முடியாமல் சிறையில் உள்ளனர்.

இவர்களின் விடுதலை தொடர்பாக விஜித ஹேரத் அவர்களிடம் ஒக்டோபர் மாதம் நான் வலியுறுத்தியிருந்தேன் அதற்கு பதிலளித்த அவர் விடுதலை இடம்பெறுகின்றது அதற்கான வேலைகள் இடம்பெறும் என தெரிவித்திருந்தார்.

அதற்கு பின்னர் பிரதியமைச்சர் ஒருவரின் ஊடாக ஹர்ச்சநாணயக்கார அவர்களிற்கு எடுத்துக் கூறியிருந்தேன். அதற்குரிய பதில் எனக்கு கிடைக்கவில்லை.

அதன் பின்னர் பிரதமர் ஹரிணி அமரசூரியவிற்கு பல்வேறு தகவல்களை அனுப்பியிருந்தேன். செய்திகளை அனுப்பியிருந்தேன், எத்தனையோ ஊடக சந்திப்புகள் ஊடாக அரசியல் கைதிகள் தொடர்பாக அவர்களின் கஷ்டங்கள், ஏற்கனவே வழங்கப்பட்ட வாக்குறுதி மக்கள் ஆணை கிடைத்திருக்கின்றது அவர்களின் விடுதலை என்பது காலத்தின் கட்டாயம் என்பதை தொடர்ச்சியாக எடுத்துக் கூறிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மீண்டும் என்பிபி தோழர்கள் பொய்யான வாக்குறுதிகளுடன் தேர்தலிற்காக களத்தில் குதித்துள்ளனர்.

இவர்களிற்கு முதுகெலும்பு இருந்தால் அரசியல்கைதிகளின் விடுதலையின் பின்னர் இவர்கள் இந்த தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். தொடர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டு பொய்யான வாக்குறுதிகளை வழங்கிக் கொண்டிராமல் இந்த சித்திரவதையை இத்துடன் நிறுத்தி அவர்கள் வாழ்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

இதற்கு முன்னர் விடுதலையான எந்தவொரு அரசியல் கைதியும் இந்த சமூகத்திலே எந்தவொரு பிழையான நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. பொய்யான வாக்குறுதிகளை வழங்கிக் கொண்டு அரசியல் இலாபம் தேடும் நோக்கிலே இந்த அரசாங்கம் நகரக் கூடாது.

அவர்களின் விடுதலைக்கு எந்த காரணமும் தடையாகயிருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் இரண்டு வருடங்களிற்கு முன்னர் நாற்பத்தெட்டு பேர் இருந்தனர். 38 பேரின் விடுதலை இடம் பெற்றுள்ளது அதேபோல மிகுதி பத்து பேரின், விடுதலை நிச்சயமாக இடம்பெறக்கூடிய ஒன்று தான்.

ஏனென்றால் அனைத்து அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதியினால் அவர்களிற்கான பொதுமன்னிப்பை வழங்க முடியும்.சட்டமா அதிபர் அவர்களிற்கு எதிரான வழக்குகளை தள்ளுபடிசெய்து அவர்களை விடுதலை செய்யலாம். ஏனென்றால் போதுமான வாக்கு மூலங்கள் கிடையாது சிங்களத்தில் பதியப்பட்ட வாக்குமூலங்களை அடிப்படையாக கொண்டுதண்டனை வழங்கப்பட்டுள்ளது. தண்டனையாகயிருந்தால் கூட அவர்கள் இரண்டு ஆயுள் தண்டனையை அவர்கள் எதிர்நோக்கி முடித்திருக்கின்றார்கள்.

## தேசபந்து தென்னக்கோனை ஒளித்து....

19ம்பக்கத் தொடர்ச்சி) டிரான் அலஸ் பணம் வழங்கியிருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுகின்றது. தற்போது தும்பர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தேசபந்து தென்னக்கோனிடம் முறையாக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அவர் மறைந்திருந்த இடம் மற்றும் அவரு க்கு பாதுகாப்பு வழங்கியவர்கள் பற்றிய விபரங்கள் வெளிவரக்கூடும். அதன் மூலம் நீதிமன்ற உத்தரவுகளை மீறி அவரை பாதுகாத்தமைக்கு அவர் களின் மீது சட்டம் பாயலாம்.

## சீனாவின் கடன் பொறி உண்மையா?

(16ம் பக்கத் தொடர்ச்சி) முழுதாக நிதி நிறுவனங்களுக்கு சாதகமானதாகவே அது இருக்கும். அதன் மூலம் தான் நிதி நிறுவனங்கள் கொழுத்த இலாபத்தை பெற்றுக் கொள்கின்றன.

அதே பாணியில் தான் சீனா இலங்கைக்கு கடனை வழங்கியது என்றால் கடனை திரும்ப வசுலிக்க முற்படுகிறது என்றால் 7 பில்லியன் டொலர்களை கடன் மறுசீரமைப்பினால் இழந்திருப்பதாக கூறுகிறது என்றால் கடன் பொறி இராஜதந்திரம் என சீனாவின் மீது மேற்குலகம் சுமத்தி வந்த குற்றச்சாட்டும் அப்பட்டமான உண்மை என்பது நிரூபணம் ஆகிவிடும்

## 20 வருடங்களின் பின் உடுகம்பொல விடுதலை

2002 ஆம் ஆண்டு அத்துருகிரியவில் உள்ள `மிலேனியம் சிட்டி` வீட்டுத் திட்டம் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவால் பராமரிக்கப்பட்டு வந்த பாதுகாப்பான இல்லம் பற்றிய தகவல்களைப் பகிரங்கப்படுத்தியதன் மூலம் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவித்ததாகக் கூறி, கண்டி முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து அவரை விடுவித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுமார் இருபது வருடங்களாக நீடித்த நீண்ட விசாரணைக்குப் பிறகு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்யா பட்டபெந்திகே இந்த தீர்ப்பை அறிவித்தார்.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி அன்று அத்துருகிரியவில் உள்ள `மிலேனியம் சிட்டி` வீட்டு திட்டத்தில் பராமரிக்கப்பட்டு வந்த இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவுக்குச் சொந்தமான ஒரு பாதுகாப்பு இல்லத்தை சோதனையிட்டு இராணுவ புலனாய்வு அதிகாரிகள் மற்றும் அவர்களின் நடவடிக்கைகள் குறித்த தகவல்களைப் பகிரங்கப்படுத்தியதன் மூலம், நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் தேசிய பாதுகாப்பை பாதிக்கும் வகையில் செயல்பட்டதன் ஊடாக அதிகாரப்பூர்வ இரகசியச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டிய கண்டி முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொலவுக்கு எதிராக சட்டமா அதிபர் இந்தக் குற்றப்பத்திரிகியை தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# கனடா தேர்தலில் இந்தியா - சீனா தலையிட முயற்சி? கனடா முன் வைக்கும் பரபரப்புக் குற்றச்சாட்டு!

கனடாவின் புதிய பிரதமராக மார்க் கார்னி, கடந்த 14 ஆம் திகதி பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு, வரும் அக்டோபர் மாதம் வரை பதவிக் காலம் இருக்கும் நிலையில், நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைத்து அடுத்த மாதம் 28ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்த அழைப்பு விடுத்துள்ளார்.

இதையடுத்து கனடாவில் உள்ள 343 நாடாளுமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் வருகிற ஏப்ரல் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது. 172 தொகுதிகளில் வெற்றி பெற்று பெரும்பான்மை பெறும் கட்சி, ஆட்சி அமைக்கும். தற்போது லிபரல் கட்சி மற்றும் கன்சர்வேடிவ் கனடா கட்சிகளிடையே இரு முனைப் போட்டி நிலவுகிறது. ட்ரம்பின் வரி விதிப்பு, அச்சுறுத்தல் உள்ளிட்டவை குறித்து பிரசாரத்தில் முன்னிலைப்படுத்த இரு கட்சிகளும் திட்டமிட்டுள்ளன. இந்த நிலையில் கனடாவில் நடை பெறவுள்ள பொதுத் தேர்தலில் சீனா, இந்தியா, ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தலையிட முயற்சிக்கக் கூடும் என அந்நாட்டின் உளவுத் துறை எச்சரித்துள்ளது.

தேர்தல் குறித்து அந்நாட்டு உளவுத் துறையின் துணை இயக்குநர் வனேசா லாயிட், கனடா தேர்தலில், ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் வாய்ப்புள்ளது. இந்தியா, தனது அரசியல் செல்வாக்கை மேலும் வலுப்படுத்த கனடா தேர்தலில் தலையிடுவதற்கான நோக்கத்தையும் திறனையும் கொண்டுள்ளதை நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

அது போல், கனடாவின் தேர்தலில் செயற்கை நுண்ணறிவு கருவிகளை பயன்படுத்த சீன அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கனடாவில் உள்ள சீன இன, கலாசார மற்றும் மதச் சமூகங்களைக் குறி வைத்து அவர்களுக்கு உடன் படுபவர்களுக்கு ஆதரவான கதைகளை சமூக ஊடகங்கள் மூலம் சீனா பரப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல் ரஷ்யாவும் பாகிஸ்தானும் கனடா தேர்தலில் தலையிட வாய்ப்புள்ளது. கடந்த தேர்தலிலும் இந்தியா, சீனா தலையிட முயற்சித்தது. ஆனால், எவ்வித பாதிப்பு ஏற்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.



கடந்த கனடா தேர்தலில் தலையிட்டதாக எழுந்த குற்றச்சாட்டை ஏற்கெனவே இந்தியாவும் சீனாவும் மறுத்துள்ளது. புதிய குற்றச்சாட்டு தொடர்பாக இரு நாடுகளும் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் கொலை வழக்கில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடந்த 2023இல் எழுப்பிய குற்றச்சாட்டுக்கு பிறகு இருநாட்டின் உறவில் விரிசல் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# டிரம்பிற்கு திருப்பியடிக்கும் கனேடிய மக்கள்! 2 பில்லியன் டொலர்கள், 14,000 வேலை வாய்ப்பு இழப்பு




கனடிய மக்கள் அமெரிக்க கார்கள், போர்பன் மற்றும் மாமிசத்தைப் புறக்கணித்துள்ள நிலையில், தற்போது அமெரிக்காவில் விடுமுறையை கழிக்க செல்வதையும் கை விட்டுள்ளனர். கனடாவை அமெரிக்க மாகாணம் என தொடர்ந்து அச்சுறுத்தி வரும் ட்ரம்புக்கு கனேடிய மக்கள் பதிலடி அளித்துள்ளனர். கனேடிய மக்களின் இந்தப் புறக்கணிப்பால் அமெரிக்க சுற்றுலாத் துறைக்கு பேரிடி என்றே கூறப்படுகிறது.

அமெரிக்காவிற்கு பயணப்படும் சர்வதேச பயணிகளில் கனடியர்களே நீண்ட காலமாக முன்னணியில் உள்ளனர். அவர்களின் பயணச் செலவில் 10 சதவீதம் சரிவடைந்தால் கூட அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு 2 பில்லியன் டொலர் இழப்பை அது ஏற்படுத்தும்.

இதனால் 14,000 வேலை இழப்புகள் ஏற்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. கனேடிய மக்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளது தற்போது வெளிப்படையாக தெரியத் தொடங்கியுள்ளது. அதாவது பிப்ரவரியில் அமெரிக்காவிற்கான கனேடிய விமானப் பயணம் 13 சதவீதம் குறைந்துள்ளது.

காரில் பயணம் செய்வதும் சீரான சரிவைக் கண்டுள்ளது, கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடும் போது காரில் எல்லையைக் கடக்கும் கனேடியர்களின் எண்ணிக்கை 23 சதவீதம் குறைந்துள்ளது.

இது ஜனாதிபதி ட்ரம்பின் 51வது மாகாணம் என்ற அச்சுறுத்தலுக்கு பின்னரே நடந்துள்ளது. இதனிடையே தேவை குறைந்துள்ளதால், ஏப்ரல், மே மற்றும் ஜீன் மாதங்களுக்கு அமெரிக்கா செல்லும் விமானங்களுக்கான எண்ணிக்கையை விமான நிறுவனங்கள் சரா சரியாக 6.1 சதவீதம் குறைக்க வழி வகுத்துள்ளது.

கடந்த மாதம் லாஸ் வேகாஸுக்கு பயணப்பட்ட கனேடியர்களின் எண்ணிக்கை 9.4 சதவீதம் குறைந்துள்ளது, அதே காலகட்டத்தில் நியூயார்க் பயணப்பட்டவர்களின் எண்ணிக்கை 11 சதவீதம் குறைந்துள்ளது.

வரி அச்சுறுத்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து ப∴பலோ நயாகராவிற்கான கனேடிய போக்குவரத்தும் 52 சதவீதம் குறைந்துள்ளது. ∴பிளேர் ஏர்லைன்ஸ் அடுத்த மாதம் வான்கூவர் மற்றும் கால்கரியில் இருந்து அரிசோனாவின் பீனிக்ஸ் வரையிலான அதன் வழித்தடங்களைக் கூட கைவிடுகிறது. இந்த நிலையில் ட்ரம்பின் அச்சுறுத்தல்களுக்கு கனேடிய மக்கள் ஒரு போதும் பணியப் போவதில்லை என கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி சூளுரைத்துள்ளார்.

## டெஸ்லாவுக்கான சலுகைக் கொடுப்பனவுகளை முடக்கும் கனடா

டெஸ்லாவுக்கான அனைத்து சலுகைக் கொடுப்பனவுகளையும் கனடா முடக்கியுள்ளது. மேலும், மின்சார வாகன தயாரிப்பாளரை எதிர்கால மின்சார வாகன தள்ளுபடி திட்டங்களில் இருந்து தடை செய்துள்ளது என்று ஒட்டோவாவின் போக்குவரத்து அமைச்சர் கிறிஸ்டியா ∴ப்ரீலேண்ட் 25 மார்ச் 2025 செவ்வாயன்று தெரிவித்தார்.

ஒவ்வொரு கோரிக்கையும் தனித்தனியாக விசாரிக்கப்பட்டு செல்லுபடியாகும் என தீர்மானிக்கப்படும் வரை தள்ளுபடி கொடுப்பனவுகள் எதுவும் செய்யப்படாது என்று ∴ப்ரீலேண்ட் தனது அலுவலகம் பகிர்ந்து கொண்ட மின்னஞ்சல் அறிக்கையில் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்காவுடனான கனடாவின் உறவு ஒரு மையப் பிரச்சினையாக மாறியுள்ள ஒரு கூட்டாட்சித் தேர்தலுக்கு மத்தியில் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

கருத்துக்கான ரொய்ட்டர்ஸ் கோரிக்கைக்கு டெஸ்லா உடனடியாக பதிலளிக்கவில்லை. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஏராளமான வரி விதிப்பு திட்டங்களை வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக ஏப்ரல் தொடக்கத்தில் பெரும்பகுதி கனடாவிலிருந்து வரும் பெரும்பாலான பொருட்களுக்கு 25 சதவீத வரிகளாக விதிக்கப்படும்.

திங்களன்று ட்ரம்ப் ஆட்டோமொபைல் வரிகள் விரைவில் வரும் என்று கூறினார், இருப்பினும் அவர் அச்சுறுத்திய அனைத்து வரிகளும்



ஏப்ரல் 2ஆம் திகதி அமல்படுத்தப்படாது என்று முன்னர் குறிப்பிட்டது போல் கூறினார்.

டெஸ்லா நிறுவனத்திற்கு 43 மில்லியன் டொலர் தள்ளுபடி தொகையை கனடா முடக்கியுள்ளது. ஏப்ரல் 28 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என்று லிபரல் தலைவர் மார்க் கார்னி அறிவிப்பதற்கு முன்பே பணம் செலுத்துவதை நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக டொராண்டோ ஸ்டார் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மாத தொடக்கத்தில் அமெரிக்காவுடனான வர்த்தக பதட்டங்கள் காரணமாக, டாக்சிகள் அல்லது சவாரி பங்குகளாக வாங்கப்பட்ட டெஸ்லா கார்களுக்கு நிதி சலுகைகளை வழங்குவதை ஒன்ராறியோ நிறுத்தியது.

ட்ரம்பின் நெருங்கிய கூட்டாளியான டெஸ்லா தலைமை நிர்வாக அதிகாரி எலோன் மஸ்க், அரசாங்க செயல்திறன் துறையின் தலைவராக, கூட்டாட்சி அரசாங்கத்தையும் பட்ஜெட்டையும் சுருக்க வெள்ளை மாளிகை முயற்சிக்கு தலைமை தாங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மக்ளஸ்கி சட்டத்தின் மீதான தடையை வரவேற்கின்றோம்
# சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் தெரிவிப்பு

போர்க் குற்றவாளிகள் என்று குற்றஞ் சாட்டப்பட்ட இலங்கை நபர்கள் மீது பிரித்தானியா மக்னஸ்கி சட்டத்தின் கீழான தடையை அறிவித்துள்ளமையை வரவேற்கின்றோம் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா விடுத்துள்ள ஊடக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையின் போர்க்கால இராணுவத் தளபதிகள் மூவர் மீதும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட தமிழ் துணை இராணுவ குழுத் தலைவர் ஒருவர் மீதும் மக்னஸ்கி சட்டத்தின் கீழ் பிரித்தானிய அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இந்த ஆச்சரியமான முடிவினை பாதிக்கப்பட்டவர்களும் உலகளாவிய மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் வரவேற்றுள்ளனர். இந்த அறிவிப்பு குறித்து இப்போது எனது உணர்வுகள் எப்படி உள்ளன என்பதை வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியாதுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில், உள்நாட்டுக்குள் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையினை நான் இழந்து கொண்டிருந்தேன். ஆனால், இவ் விடயங்களுக்காக போராடிவரும் ஒரு சட்டவாளராகிய எனக்கு இது ஒரு நம்பிக்கைக் கீற்றினைத் தந்துள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் சமூகங்களுக்கும் சிறிய சந்தோஷத்தினை இது கொடுக்கும். எமது போராட்டத்தினை நாங்கள் கைவிடப் போவதில்லை என்று வட இலங்கையைச் சேர்ந்த மனித உரிமைகள் தொடர்பான சட்டவாளர் தெரிவித்தார்.

ஒவ்வொரு போர்க் குற்றவாளிகளும் கொலை, காணாமல் போகச்செய்தல் போன்ற பாரதூரமான வன்முறைகளில் ஈடுபட்டவர்களும் பொறுப்புக்கூறலுக்கு ஆளாக்கப்படுதல் வேண்டும்.

இந்தச் செய்தியானது என்னைப் போன்ற பாதிக்கப்பட்டவர்களுக்கும் எமது குடும்பங்களுக்கும் நீதிக்காக தொடர்ந்தும் போராடுவதற்கான சிறு நம்பிக்கையைக் கொடுக்கிறது என்று இலங்கையிலிருந்து தப்பிப் பிழைத்து வெளிநாட்டில் வசிக்கும் பாதிக்கப்பட்ட ஒருவர் கூறினார்.

சசீந்திர சில்வா அத்துடன் இந்த ஆண்டு ஓய்வுபெற்ற ஜெனரல் சவேந்திர சில்வா இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின் போது, சட்டவிரோதக் கொலைகள், சித்திரவதைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இராணுவப் படைப்பிரிவு ஒன்றுக்குத் தலைமைதாங்கி வழிநடத்தியதாக பிரித்தானிய அரசாங்கம் இணையத்தில் வெளியிட்ட தடைப் பட்டியலில் கூறப்பட்டுள்ளது.

படுகொலைகளைச் செய்வதற்கு சவேந்திர சில்வா கட்டளை பிறப்பித்ததாக நேரடியாக குற்றச் சாட்டியுள்ளது. குறிப்பாக சரணடைய முயன்ற விடுதலைப்புலித் தலைவர்கள் கொல்லப்பட வேண்டுமென ஆணை பிறப்பித்ததுடன், போரின் இறுதி நாட்களில் சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களை இவரது தலைமையிலான படையினர் கொலை செய்த காலப் பகுதியில் இவர் களமுனையிலும் இருந்துள்ளார்.

அது 'வெள்ளைக்கொடிச் சம்பவம்' என்று அறியப்படும் சம்பவத்தினை குறிக்கிறது. இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறை உறுப்பினர்கள் சரணடையுமாறு தூண்டப்பட்டு, நீதிக்குப் புறம்பான முறையில் கொல்லப்பட்டார்கள்.

ஐ.நா. மேற்கொண்ட விசாரணையும், இத்தலைவர்கள் (ஒருவருடைய மனைவி உட்பட) அங்கிருந்த மூத்த இராணுவத் தலைமைப்பீடத்தின் கட்டளையின் கீழ் படைவீரர்களால் படுகொலை செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளதென முடிவு செய்துள்ளது.

இச்சரணடைவு தொடர்பில் 2015ஆம் ஆண்டில் முதன்முதலாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் வெளிக்கொண்டு வந்த




துடன், 2019இல் சவேந்திர சில்வா தொடர்பாக ஆவணம் ஒன்றினையும் வெளியிட்டது.

2021ஆம் ஆண்டில் பிரித்தானியாவுக்கும் கனடாவுக்கும் விபரமான தடைக் கோவைகளையும் இது அனுப்பி வைத்திருந்தது.

'பாதிக்கப்பட்டவர்களதும் அவர்களது குடும்பங்களதும் இரத்தமும் வியர்வையும் கண்ணீரும் வீணாகிப் போகவில்லை. போர்க்குற்றவாளிகளை அவர்களது கொடூர அட்டூழியங்களுக்கு பொறுப்புக் கூறவைப்பதனை நோக்கிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ள பிரித்தானிய அரசாங்கத்துக்கு நன்றிகள்' இவ்வாறு போரிலிருந்து உயிர் தப்பி தற்போது பிரித்தானியாவில் வாழும் தமிழர் ஒருவர் கூறினார்.

ஜகத் ஜெயசூரியவுக்கு எதிராக 2017 ஆம் ஆண்டில், உலகளாவிய அதிகார வரம்பு வழக்குகளை இலத்தீன் அமெரிக்காவில் தாக்கல் செய்தது.

சித்திரவதைக்கும் பாலியல் வன்முறைகளுக்கும் பெயர்போன ஜோசப் முகாம் எனப்படும் இராணுவ முகாமிற்குப் பொறுப்பாக இருந்தமை தொடர்பிலேயே இவர் மீது வழக்குகள் தொடரப்பட்டன.

அந்நேரத்தில் இலங்கையின் இராஜதந்திரியாக இருந்த அவர், இதன் விளைவாக பிரேசிலிலிருந்து தப்பி, இலங்கைக்கே திரும்பியிருந்தார். 2019ஆம் ஆண்டு, இரண்டு முறை இவர் அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொண்டதைத் தொடர்ந்து, சர்வதேச நீதிக்கான அவுஸ்திரேலிய மையத்துடன் இணைந்து 2020ஆம் ஆண்டு சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் இவர் தொடர்பில் அவுஸ் திரேலிய மத்திய பொலிஸாருக்கு 5 முறைப்பாடுகளைச் செய்தது.

எனினும், இலங்கைக்கு உள்ளேயே விசாரணை நடை பெறுவதையே தாம் விரும்புவதால் இம்முறைப்பாடு தொடர்பில் தாம் விசாரணை நடத்த மாட்டோமென 2022ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய பொலிஸ் துறை தெரிவித்தது.

அதே ஆண்டில், ஜெயசூரிய தொடர்பான 100 பக்கங்களைக் கொண்ட தடை ஆவணம் ஒன்றினை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் பிரித்தானிய அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்தது. பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் ஒரு ஆவணத்தினை அனுப்பி வைத்தது.

வசந்த கரன்னகொட போர்க்காலத்தில் கடற்படைத் தளபதியாகவும் இராஜதந்திரியாகவும் இருந்த வசந்த கரன்னகொடவும் தடை செய்யப்பட்டுள்ளார். இதர விடயங்களுடன், கிழக்குக் கரையோரத்தில் உள்ள பிரதான கடற்படை முகாமில் நிலக்கீழ் சித்திரவதைக் கூடங்களை வைத்திருந்ததுடன், போர் நடந்த நேரத்திலும், அதற்குப் பின்னரும், பல எண்ணிக்கையிலான மக்கள் சித்திரவதை செய்யப்பட்டதுடன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதும் இங்கே நிகழ்ந்தன. தற்போது ஐரோப்பாவில் வாழும், காணாமலாக்கப்பட்டவருடைய ஓர் உறவினர் தெரிவித்தார்.

கடற்படை புலனாய்வுத்துறையால் கடத்தப்பட்டு, வலிந்து காணாமலாக்கப்பட்ட பிள்ளையின் தாயார் ஒருவர் கூறும் போது 'இது மிகவும் நல்ல செய்தி. இது எமக்கு நம்பிக்கையைத் தருகிறது. ஆனால் எங்கள் அரசாங்கத்தை பற்றிய சந்தேகங்கள் எமக்கு இப்போதும் இருப்பதால், நான் நினைப்பதை என்னால் வெளிப்படையாகக் கூறமுடியாது' என்று தெரிவித்தார்.

ஒரு தமிழ் துணை ஆயுதக் குழுத் தலைவரான, கருணா என அறியப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனும் தடை செய்யப்பட்டுள்ளார். 2008ஆம் ஆண்டு கடவுச்சீட்டு மோசடிக்காக பிரித்தானியாவில் இவர் சிறைப்படுத்தப்பட்டிருந்தார். அவர் மீது போர்க் குற்றங்களுக்கான விசாரணைகள் நடந்து கொண்டிருந்த போதிலும், அந் நேரத்தில் அவர் மீது எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து, இராணுவத்துடன் இணைந்து கொண்ட கருணாவின் படைகள், கட்டாய ஆட்சேர்ப்பு, சிறுவர் ஆட்சேர்ப்பு, கடத்தல், கொலைகள், சித்திரவதை மற்றும் மிரட்டல் ஆகியவற்றில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

'காலதாமதமானாலும் இறுதியில் நீதி கிடைக்கும் என்பதுடன் இப்போர்க் குற்றவாளிகள் பொறுப்புக்கூறலுக்கு ஆளாக்கப்படுவார்கள். இவர்கள் இழைத்த கொடிய பாவங்களுக்கான தண்டனையிலிருந்து அவர்களால் தப்பமுடியாது என்ற வலுவான செய்தியினை போர்க்குற்றவாளிகளுக்கு இத்தடைகள் வழங்கும்' என சித்திரவதையிலிருந்து உயிர் தப்பிய தமிழர் ஒருவர் கூறினார்.

இத்தடைகள் 2020ஆம் ஆண்டுக்கான பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தடைகளுக்கான ஒழுங்கு முறைகளை அடிப்படையாகக் கொண்டவை. பட்டியலிடப்பட்ட தனி நபர்களுக்கு எதிராக நிதி, இயக்குனர் தகுதிநீக்கம் மற்றும் குடிவரவுத் தடைகள் விதிக்கப்படுகின்றன.

பிரித்தானியாவின் தடைப்பட்டியலில் கூறப்பட்டுள்ளதன்படி, நான்கு இலங்கை பிரஜைகள் மீது நிதி மற்றும் பயணத்தடைகள் விதிக்கப்படுகின்றன. இலக்கு வைக்கப்பட்ட சொத்து முடக்கங்கள் என்பதில் பண மற்றும் இதர சொத்துக்களை (சொத்து அல்லது வாகனங்கள்) முடக்குவது மற்றும் அவர்களுக்கு எந்த சொத்துக்களும் கிடைக்க மாட்டாது என்பதை உறுதிப்படுத்துவது என்பன உள்ளடங்கும்.

மேலும், தடை செய்யப்பட்ட நபர்கள் இங்கிலாந்தில் நுழையவோ அல்லது வசிக்கவோ முடியாது என்பதுடன் இடைத்தங்கல் உட்பட இங்கிலாந்துக்கு பயண விசா விண்ணப்பமும் மறுக்கப்படும். மேலும், நிதித் தடைகளை மீறுவது ஒரு குற்றவியல் குற்றமாகும்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர், இப் போர்க்குற்றவாளிகளால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்கள், தஞ்சம் புகுந்துள்ள நாடுகளில் ஒன்றான பிரித்தானியாவினால் இவர்கள் பற்றிய உண்மை இறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதையிட்டு நாம் மகிழ்வடைந்துள்ளோம். கடந்த ஒரு தசாப்தமாக இவர்களைப் பற்றிய ஆதாரங்களை நாம் தொகுத்து வந்துள்ளோம்.

ஆனால், இவர்களுக்கு எதிரான வாக்குமூலங்களை வழங்கிய பாதிக்கப்பட்டவர்களையும், பல வருடங்களாக அமைதியாகவும் தொடர்ச்சியாகவும் நீதிக்காக போராடிவந்த தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த தனிநபர்களையுமே இதற்குரிய பெருமை சென்றடைய வேண்டும் என்றார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர், இப் போர்க்குற்றவாளிகளால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்கள் தஞ்சம் புகுந்துள்ள நாடுகளில் ஒன்றான பிரித்தானியாவினால் இவர்கள் பற்றிய உண்மை இறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதையிட்டு நாம் மகிழ்வடைந்துள்ளோம்.

கடந்த ஒரு தசாப்தமாக இவர்களைப் பற்றிய ஆதாரங்களை நாம் தொகுத்து வந்துள்ளோம். ஆனால், இவர்களுக்கு எதிரான வாக்குமூலங்களை வழங்கிய பாதிக்கப்பட்டவர்களையும், பல வருடங்களாக அமைதியாகவும் தொடர்ச்சியாகவும் நீதிக்காக போராடிவந்த தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த தனிநபர்களையுமே இதற்குரிய பெருமை சென்றடைய வேண்டும் என்றுள்ளது.



VIBRANT HOSPITALIT GROUP
தமிலோசை வழங்கும்
Canada Tamil Music Festival
இசைக் குயில் 2025
25 YEARS
APRIL
SATURDAY
12
2025
3 PM ONWARDS
ADMIT ONE
TICKET $20
VIP TICKETS
DURHAM CONVENTION CENTER
630 BRCK CRESCENT AJAX, ON L1Z 1C9 | 416 556 3219
Announcers
MUSICAL BAND
NATCHATHRAA MUSIC GROUP

# எளிமையாக நடைபெற்ற மிஸிசாகா மாநகரின் சரவணபவன் உணவகத்தின் மீள் திறப்பு விழா

உலகின் முதன்மை முன்னணி சைவ உணவகமாகத் திகழ்வது சரவணபவன் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அந்த உணவகம் கனடாவில் நான்கிற்க்கு மேற்பட்ட கிளைகளுடன் சிறப்பாக இயங்கி வருகின்றது. அதன் உரிமையாளராகவும் முதன்மை நிர்வாகியாகவும் திகழ்பவர் சமூக - சமய - இன நலன் சார்ந்து தாயகத்திலும் கனடா மண்ணிலும் பல மகத்தான சேவையாற்றி வரும் திரு சுகுமார் கணேசன் அவர்களாவர்.

மிஸிசாகா நகரில் சுமார் 19 வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் சரவணபவன் உணவகத்தை முற்று முழுதாக நவீன மயப்படுத்தி புதிய வடிவமைப்பில் திருத்தம் செய்து 26 மார்ச் 2025 புதன்கிழமை சுபவேளையில் மீள் திறப்பு ஒரு எளிமையான விழாவாகவே நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு முன்னாள் - இந்நாள் - எதிர்கால பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள், சமூக ஊடகவியலாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கனடா வரசித்திவிநாயகர் ஆலயத்தின் முதல்வரும் அந்தணச் சிவாச்சாரியாருமான சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களது வேத பாராயணத்துடனும் ஆசியுரையுடனும் ஆரம்பமான நிகழ்வில் பல்வேறு தரப்பு பிரமுகர்கள் வாழ்த்துரைகள் வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து கனடா வைத்தியசாலைக்கு ஒரு தொகை நிதியுதவி வழங்கப்பட்டது.

திரு சுகுமார் அவர்களது நெருங்கிய நண்பரான திரு குலா செல்லத்துரை அவர்கள் கனடாவிலும் தாயகத்திலும் திரு சுகுமார் அவர்கள் செய்து வருகின்ற பல்வேறு தரப்பட்ட பணிகளையும் அதற்கு அவர் தனது சொந்தப் பணத்தில் இருந்து எவ்வளவு தொகையை வழங்கி வருகின்றார் என்பதை எடுத்துரைத்த போது வந்திருந்த அனைவரும் பலத்த கரகோஷம் செய்து வாழ்த்தினார்கள்.

சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் ஒரு உணவகம் மீள் திறப்பு விழா என்பதற்கு அப்பால் அந்த உணவகத்தை நடத்துகின்ற திரு சுகுமார் கணேசன் அவர்களது பொதுப்பணியை - சேவை மனப்பான்மையை பலர் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

சரவணபவன் உணவகத்தின் உணவு நாவுக்கு சுவையாக மட்டுமல்ல நெஞ்சுக்கும் மனநிறைவைத் தருகின்ற ஒரு இடமாக இருக்கின்றது என்றால் அது மிகையல்ல. ஏனென்றால் நாம் உணவுக்கு வழங்குகின்ற நிதியில் கணிசமான தொகை சமூகப் பணிகளுக்கும் செலவளிக்கப்படுகின்றது. திரு சுகுமார் கணேசன் அவர்கள் போன்று சேவை உள்ளம் கொண்டவர்கள் தமிழ்சமூகத்தில் பலர் உருவாக வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

நிறைவாக மதிய வேளை வயிறு நிறைந்த உணவும் வீடு திரும்பும் போது மன மகிழ்வோடு இனிப்புப் பண்டங்களும் வழங்கி அனைவரையும் வழி அனுப்பி வைத்தார் திரு சுகுமார் அவர்கள். அது மாத்திரமல்ல தன்னை மட்டும் முதன்மைப் படுத்திக் கொள்ளாது அனைத்து ஊழியர்களையும் அரங்கத்திற்கு அழைத்து அவர்களை அறிமுகப் படுத்தி அவர்களையும் பெருமைப்படுத்தியது பாராட்டுக்குரியது. இந்நிகழ்வினை தம்பி கணேஷ் அவர்கள் அழகாகத் தொகுத்து வழங்கினார்.

நீண்ட குளிர்கால இடைவெளிக்குப் பின்னர் மனம் நிறைந்த ஓர் நிகழ்வில் கலந்து கொண்ட திருப்தியோடு வீடு திரும்பினோம். வாழ்க சுகு அண்ணர்! தொடர்க உங்கள் பணி! வளம் பெறுக! நலம் சூழ்க! -போட்டோ - ஐயா

**- யசோ பரமேஸ்**

































# சவேந்திர டி சில்வா - வசந்த கரணாகொட - ஜகத்ஜெயசூரியா கருணாஆகியோருக்கு எதிராக பிரிட்டன் தடை உத்தரவு!



இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட முன்னாள் இராணுவ தளபதிகள் கடற்படை தளபதி மற்றும் கருணா அம்மான் ஆகியோருக்கு எதிராக பிரிட்டன் தடைகளை அறிவித்துள்ளது.

பிரிட்டன் இலங்கையின் உள்நாட்டு போரின ் போது பாரதூரமான மனித உரிமைமீறல்களில் ஈடுபட்டவர்கள் துஸ்பிரயோகங்களில் ஈடுபட்டவர்களிற்கு எதிராக தடைகளை விதித்துள்ளது.

முன்னாள் இராணுவதளபதி சவேந்திர சில்வா முன்னாள் கடற்படை தளபதி வசந்தகரணாகொட முன்னாள் இராணுவத்தளபதி ஜகத்ஜெயசூரிய. கருணா அம்மான்.ஆகியோருக்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதித்துள்ளது.

இது தொடர்பில் பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அபிவிருத்தி அலுவலகம் தெரிவித்துள்ளதாவது. பிரிட்டன் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது பாரதூரமான உரிமை மீறல்கள் துஸ்பிரயோங்களில் ஈடுபட்டமைக்காக இலங்கையின் முன்னாள் தளபதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதி ஆகியோருக்கு எதிராக தடைகளை விதித்துள்ளது. பாரதூரமான மனித உரிமை மீறல்கள்துஷ்பிரயோகங்களிற்கு பொறுப்புக் கூறலை உறுதி செய்வதும் தண்டனையின் பிடியிலிருருந்து விலக்களிக்கப்படும் கலாச்சாரத்தை தடுப்பதும் இதன் நோக்கம்.

இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் மனித உரிமைகள் இணைந்து பணியாற்றுவது குறித்து பிரிட்டன் அர்ப்பணிப்புடன் உள்ளது தேசிய ஐக்கியம் தொடர்பான அவர்களின் அர்ப்பணிப்பை பிரிட்டன் வரவேற்கின்றது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது சட்டவிரோத படுகொலைகள் சித்திரவதைகள் பாலியல்வன்முறைகள் உட்பட பாரிய மனித உரிமை மீறல்கள் துஸ்பிரயோகங்களில் ஈடுபட்டமைக்காக நால்வருக்கு எதிராக பிரிட்டன் தடைகளை அறிவித்துள்ளது.

இலங்கையின் முன்னாள் சிரேஸ்ட இராணுவதளபதிகள் பின்னர் கருணா குழு என்ற துணைப்படைக்கு தலைமை தாங்கிய விடுதலைப்புலிகளிற்கு எதிராக இலங்கை இராணுவத்தின் சார்பில் செயற்பட்டவர் உட்பட நால்வருக்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதித்துள்ளது.

போக்குவரத்து தடைகள் சொத்துக்களை முடக்குதல் உட்பட பல நடவடிக்கைகள் இந்த தடைகளில் அடங்கியுள்ளன.

## பொறுப்புக்கூறலை நோக்கிய முக்கியமான நடவடிக்கை பிரிட்டன் தடை குறித்து கனடிய நீதியமைச்சர் ஹரி

இலங்கை அதிகாரிகளிற்கு எதிராக பிரிட்டன் விதித்துள்ள தடைகளை வரவேற்றுள்ள கனடாவின் நீதியமைசர் ஹரி ஆனந்தசங்கரி இலங்கையில் பொறுப்புக்கூறலை நோக்கிய மற்றுமொரு முக்கியமான நடவடிக்கை இது என தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது. இலங்கை அதிகாரிகளிற்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதித்துள்ளதை நான் வரவேற்கின்றேன் .இலங்கையில் பொறுப்புக்கூறலை நோக்கிய மற்றுமொரு முக்கியமான நடவடிக்கை இது.

2023 இல் கனடா மகிந்த ராஜபக்ச கோட்டாபய ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக விதித்த தடைகளை தொடர்ந்து பிரிட்டனும் தடைகளை விதித்துள்ளது.

இலங்கையில் தண்டனையின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் கலாச்சாரத்தை முடிவிற்கு கொண்டு வருவதற்கும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் கனடா தொடர்ந்து பாடுபடும் என்றார்.

இதேவேளை முன்னாள் பாதுகாப்பு பிரதானிகளுக்கு பிரித்தானியா தடை விதித்ததன் பின்னணியில் கனடா மற்றும் அந்த நாட்டின் நீதியமைச்சர் கெரி ஆனந்தசங்கரியின் அழுத்தம் காணப்படுவதாக முன்னாள் சிரேஷ்ட இராஜதந்திரிகளில் ஒருவரான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.



கனடாவின் புதிய நீதியமைச்சர் கெரி ஆனந்தசங்கரி என்பவர், இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது இன அழிப்பு இடம் பெற்றதாக கனேடிய நாடாளுமன்றில் யோசனை ஒன்றை முன்வைத்து நிறைவேற்றிய அரசியல்வாதியாவார் என்றார்.